380

380

கலிமாவின் காதல்

முதலிய கதைகள்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

15 DEC 1944

அன்பு நிலைய நூல்கள்
யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இயற்றியவை

புதிய நூல்கள் :

தமிழிசை முழக்கம்	0	9
மீனாட்சிசுந்தரம் பிள்ளை	0	10
சிலம்புச் செல்வம் (2-ஆம் பதிப்பு) அச்சில்		
வில்லியம் ப்ளேக் (William Blake) ,,		
இன்ப மாலை (3-ஆம் பதிப்பு)	1	0
குண்டலகேசி நாடகம்	0	12
முருகன் வழிபாடு	0	4
சங்கரவிஜயம்	0	5
திருக்குற ளின்பம் (4-ஆம் பதிப்பு)	3	0
இளிச்சவாயன் (ஹியூகோவின் பிரெஞ்சு நாவல், 2-ஆம் பதிப்பு)	3	0
நாடகமணி மோலியர்	0	13
அற்புதப் பெண்மணி (மேரி-கூரி)	1	0
ஜயமணி (அரிய சமுதாய நாடகம்)	1	4
விவேகானந்தம் (பிரசங்க நாடகம்)	1	0
இராணி மங்கம்மாள் (வீரரஸ நாடகம்)	0	12
காலத்தேர் (காவிய நாடகம்)	1	4
ஸ்ரீ ராமதூதன் (கம்பன் கலை நாடகம்)	1	4
அன்பின் அற்புதம் (வாகீச விஜயம்-நாடகம்)	1	0
இனிய தமிழ் இலக்கணம்	3	4
சிவஞான தீபம்	2	4
வளையாபதி அகவல்	0	12
பராசக்தி அர்ச்சனை (2-ஆம் பதிப்பு)	0	3
திருக்காட்சி (2-ஆம் பதிப்பு)	0	6

அன்பு நிலயம்,

இராமச்சந்திரபுரம் P.O.

திருச்சி ஜில்லா.

கலிமாவின் காதல்
முதலிய கதைகள்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

031,3

15 DEC 1944
MADRAS

2172

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம் : : திருச்சி ஜில்லா

விலை ரூ. 1/-

இராஜன் எலக்ட்ரிக் பிரஸ், ஜி. டி. சென்னை

பதிப்புரை

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் "தாமரைக்குளம் முதலிய கதைகள்" என்னும் அரிய கதைவிருந்தைத் தமிழர் ஆர்வமுடன் அருந்துகின்றனர்; அவர் ஏராளமான கதைகளை எழுதி வைத்திருக்கிறார்; அவை யனைத்தும் மனித சமுதாயத்திற்குப் புதிய உணர்வளிக்கும் வாழ்வுச் சித்திரங்களாகும். "**கலிமாவின் காதல் முதலிய கதைகள்**" என்னும் இக்கதைத் தொகுதியில், ஆறு அரிய இனிய கதைகள் சேர்ந்துள்ளன. இவை யனைத்தும் உண்மைக் காதலை விளக்கும் கலைச்சித்திரங்களாகும். ஒவ்வொரு கதையும் மனிதவாழ்விற்கு ஒரு வழிகாட்டுகிறது. காதல், இல்லறம், பொதுநலம் இம் மூன்றும் எப்படியிருந்தால் மனிதன் இன்புறலாம் என்பதே இக்கதைகளின் பொருள். அடிகள் தம் கதைகளைச் சிறுகதை யென்றோ, பெருங்கதை யென்றோ வகுப்பதில்லை. கண்டு, கேட்டு, உற்ற அனுபவங்களே அவர் கதைகளின் மூலமாகும்.

இராமச்சந்திரபுரம்,
1—6—1944.

அன்பு நிலயத்தார்.

அ௩-௧-௲

15 DEC 1944
MADRAS

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	கலிமாவின் காதல்	7
2.	காதற் கைதிகள்	21
3.	சுதர்சனா	28
4.	கடிகாரச் சங்கிலி	48
5.	காவேரியின் திருமணம்	61
6.	கண்ணாளம் எப்படி?	78

கலிமாவின் காதல்
முதலிய கதைகள்

1. கலிமாவின் காதல்

எங்கும் கூச்சல், மேடை முழக்கம்; பேனுச் சிலம்பம்! ஒற்றுமைப் பல்லவி ஒருபுறம்; பிரிவினைச் சூழ்ச்சி மறு புறம்! "எனக்கு, உனக்கு" என்று நாட்டையும் வீட்டையும் பங்கு போடும் கூக்குரல் காதைத் துளைக்கிறது. "எனது தாய் நாடே, சாதி சமய வேறுபாடுகளை உதறித் தள்ளி, நீ சேர்ந்து வாழாயோ?" என்று ஓர் உள்ளம் கூவுகிறது.

ஒரே ஓர் இடத்திலிருந்து ஐக்கிய கீதம் வருகிறது:

உதய ரவியின் கதிர்கள் போலே
ஒன்று சேர்வோமே!
இதய ஸ்தானந் தன்னிற்கூடி
இனிது வாழ்வோமே!

சிறு குழந்தைகள் பாடுகிறுர்கள்; பாடி ஆடுகிறுர்கள்; ஒருவருக்கொருவர் அன்பாகக் கொஞ்சிக் குலாவி விளையாடுகிறுர்கள்; பூஞ்செடிகளுக்கு நீர் இறைக்கிறுர்கள். மணி அடிக்கிறது. எல்லாரும் தேனுண்ட

வண்டுகள் கூட்டுக்குச் செல்வதுபோலச் செல்கிறார்கள்; வட்டமாக நிற்கிறார்கள்; தம்பூராச் சுருதி கூட்டுகிறார்கள். **சத்தியம்** (சத்தியநாதர்) பாடுகிறார்:

ஒற்றுமைப் பண்ணை வளர்ப்போம்—அதில்
உள்ளன்புடனே உழைப்போம்!
வெற்றுரை தன்னை வெறுப்போம்—வெளி
வேடங்களெல்லாந் துறப்போம்!
உண்மையைப் போற்றிடுவோம்—இந்த
உலகெலாம் இன்பமுறவே
நன்மைகள் புரிந்திடுவோம்—உயர்
ஞானத்தைப் பயின்றிடுவோம்!

இந்தமாதிரி பாடியதும், "கண்மணிகாள், இப்படியே எல்லாரும் சேர்ந்து வாழ்வோம்; அதோ! சூரியன் மறைகிறான்; அவனது புன்னகையில் ஓரகமில்லை; அவனுடைய கதிர்கள் எல்லாருக்கும் பொது; அவன் கடலை முகந்து பெய்யும் மழை எல்லாருக்குந்தான். அவன் விளங்கும் வானத்தின்கீழ் இருக்கும் நாமெல்லாரும் ஒன்று. இதை எப்போதும் நினைவில் வைத்து, அன்புடன் நடப்போம்" என்று சத்தியநாதர் உபதேசிக்கிறார்; பிறகு, குழந்தைகளை அழைத்துக் கொண்டு சமையல் அறைக்குச் செல்கிறார். அங்கே எல்லாரும் எதிரெதிர் இரண்டு வரிசையாக உட்காருகிறார்கள். "பரிமாற இரண்டுபேர் வேண்டும். யார் தயார்?" "அப்பா, நான்" என்று வருகிறான் **சூரியன்**; "அப்பா நானும்" என்று வந்து நிற்கிறாள் **கலிமா**. "சரி" என்கிறார் சத்தியநாதர். இருவருக்கும் மனங் கொள்ளா மகிழ்ச்சி. "சரி, யார் தண்ணீர் கேட்பது?" "நான்" என்று முன்வந்தான் **சாம்பன்** (ஹரிஜன்). மூவரும் அழகாகப் பாய்ந்து பாய்ந்து பரிமாறினார்கள்; பந்தி

விசாரணை செய்தார்கள். எல்லாரும் இலையைக் கவனித்துச் சாப்பிட்டார்கள்; கை கழுவியதும் எல்லாரும் கூடத்தில் கூடினார்கள். யாழ்குழலுடன் சிறிது பாட்டு நடந்தது. பிறகு, அவரவர் குடிலுக்குச் சென்றார்கள். கலிமாவும் சூரியனும் சத்தியருடன் இருந்தார்கள்.

சத்தியநாதர் நல்ல வைதிகக் குடும்பத்தில் பிறந்தவர்; இப்போது மனிதரெல்லாம் ஒரே குடும்பம் என்கிறார்! அவர் சீமையில் படித்துச் சென்னையில் பதினைந்தாண்டுகள் பாரிஸ்டர் தொழில் நடத்தினார்; ஏராளமாகச் சம்பாதித்தார்; தாராளமாகச் செலவிட்டார். இப்போது மிச்சம் இந்த பங்களா, தோட்டம், பாங்கியில் இரண்டு லகாரம். அவருடைய மனைவி பத்தாண்டுகளுக்கு முன்பே சூரியனை விட்டு இறந்து போனாள். அது முதல் அவர் எந்தப் பெண்ணையும் மனைவியாகக் கருதியதில்லை; அந்த ஆசையை அன்பாக்கி, அன்பை அநாதைக் குழந்தைகளிடமே வைத்தார். சத்தியநாதர் ஒரு லட்சிய புருஷர்; அவர் வேண்டுமட்டும் படித்தார்; வாழ்வை ஆழ்ந்து பார்த்தார்; உலகை அறிந்தார்; சமுதாய சேவையில் நீந்தினார்; அரசியல் மேடையில் வாய்ச்சிலம்பம் வீசினார்; பத்திரிகைகளிலும் கைவண்ணத்தை நாட்டினார்; வேதாந்தம், சித்தாந்தம், பௌத்தம், கிறிஸ்து, இஸ்லாம் சமயங்கள் அனைத்தையும் அலசிப் பார்த்தார். அவரது லட்சியம் அகில சமரஸம்; அதை எந்தத் தனிச்சாதிமதமும் தரமுடியாது. ஆதலால், அவர் எந்த மதத்தையும் ஒப்புக்கொள்வதில்லை; எதையும் வெறுப்பதுமில்லை: "கோயில், சர்ச்சு, மசூதி எல்லாம் மனிதன் எழுப்பிய கட்டிடங்கள்; ஒன்றை ஆக்கலாம், அழிக்கலாம். ஆனால், அகண்ட வானம் சூழ்ந்த இந்த விசு

வாலயத்தை யாரும் ஆக்க அழிக்க முடியாது. அதில் பூசாரி ஆட்சி இல்லை; புரோகிதக் கட்டுப்பாடில்லை; ஆகமவிதி இல்லை; எல்லாரும் அதில் அவரவர் இடத்திலிருந்து வணங்கலாம்; எல்லாருக்கும் பொதுவாக உதிக்கும் சூரியனே அந்தக் கோயில் ஒளி. அது பேசாமல் பேசுகிறது: 'என் ஒளி எங்கும் சமமாகப் பரவுகிறது; அதுபோலவே உங்கள் உள்ளன்பும் எல்லா உயிர்களிடமும் பரவிப்பொலிக!' என்கிறது. அந்த உபதேசமே போதும். வேறெந்த மதோபதேசமும், வகுப்பு வாதமும் உலகில் வேண்டுவதில்லை என்பது அவரது கொள்கை. "**உனக்கு உண்மையாய் இரு; உலகுக்கு உதவு; அன்பை வளர்!**" இம் மூன்றுமே அவருடைய மந்திரம்.

சாதி சமயச் சின்னங்களை யெல்லாம் அவர் ஊதியெறிந்தார். அதற்காக, அவரையே உறவினர் ஊதியெறிந்தார்கள். மனைவி வீட்டுக்கு வந்தாள். உடனே அவர் பூணூலை எடுத்துவிட்டார்; மனைவியின் மாங்கல்யத்தையும் அடிமைச் சின்னமென்று கழற்றிவிட்டார்! "நன்னாருக்கு; ஊர் சிரிக்கிறதே!" என்று மனைவி தன் கன்னத்தைத் தோளில் இடித்துக் கொண்டாள். "சங்கரீ, நாம் ஊருக்காக வாழவில்லை; உண்மைக்காகவே வாழ்கிறோம். இந்த வெளிவேஷமெல்லாம் இல்லாது வாழ முடியுமா, முடியாதா என்றுதான் பார்ப்போமே" என்றார் சத்தியர்; அவள் தலை குனிந்து நடந்தால், "நிமிர்ந்து நட!" என்பார்; தன் வழியில் அவளையும் பழக்கிவிட்டார். ஆனால், பாவம், அவள் அகால மரணம் அடைந்தாள். அதற்காக அவர் அழவில்லை; கொல்லைத்தோட்டத்தில் அவளது உடலைப் புதைத்தார்; அதன்மேல் அநாதைக்

குழந்தைகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டினார். இதுவே அவர் செய்த சடங்கு. திவசம், திதி என்று வைதிக உறவினர் சொல்வார்கள்; அந்த நாளில், மூர் மார்க்கெட்டிலிருந்து பத்து அநாதைகளைக் கொண்டு வந்து குளிப்பாட்டிச் சோறு போட்டு அனுப்புவார். பெரிய பெரிய மதாசாரியர்களெல்லாம் வந்து சென்னையில் பிரசங்கங்கள் நடத்துவார்கள்; இவரது மனம் உருகாது. தெருவில் ஒரு பஞ்சை "ஐயா, பசி" என்றால் முத்து முத்தாகக் கண்ணீர் வரும். அவனை அழைத்து வந்து, "குளி; இதை அணி; சாப்பிடு; அப்பனே, ஏன் பிச்சை யெடுக்கிறாய்? வேலை தருகிறேன்; உழைத்துப் பிழை!" என்று அன்புடன் சொல்லுவார். அநாதையை அவர் அன்பு வசமாக்கிவிடும்; இரண்டு நாள் அவருடன் இருந்தால், பிறகு அவன் அவருடைய குழந்தைதான்; அவரை 'அப்பா' என்றே நினைப்பான்; அழைப்பான்.

நாடெங்கும்கட்சிகள் கிளம்பிப் பொதுநலத்தைப் பாழாக்குவதைக் கண்டு அவர் விசனிப்பார். கட்சி, வகுப்பு, சாதி, அனைத்துக்கும் அடிப்படை சுயநலம். 'நான்' என்னுமல் 'நாடு' என்று உணர்ந்தால் கலகமேது? அதுதான் இல்லை. இந்தச் சாதிமதக் கட்சிப் பூசல்களே இல்லாமல், ஒரு சமுதாயத்தை உண்டாக்க வேண்டும் என்றே அவர், "**ஒற்றுமைப் பண்ணை**" நாட்டினார். செல்வர் எவரும் அதற்குத் தம் குழந்தைகளை அனுப்பவில்லை; சாதி அபிமானிகள் அந்தப் பக்கமே நாடுவதில்லை! ஏன்? "வெட்கம் இல்லாமல் எல்லாரும் ஒன்றாகச் சாப்பிடுவதாம், படிப்பதாம், ஆடுவதாம்!" என்று அவர்கள் கண்டித்தனர். சத்தியரின் உள்ளம் அநாதைகளையே நாடியது. மகன் சூரி

யன், தன் மனப்படி நடந்ததனுலேதான் அவனையும ஒற்றுமைப் பண்ணையில் சேர்த்தார். "அப்பனுக்கு மேல் பிள்ளை" என்று ஊரார் சொன்னது தகும். சூரியன் சூரியனையே பற்றுக்கோடாகக்கொண்டு, சமரஸ உணர்ச்சியுடன் வளர்ந்தான்!

ஒற்றுமைப் பண்ணையில், ஐம்பது குழந்தைகள் இருந்தார்கள். தினம் சுமார் நூறு அநாதைகள் வந்து வேலை செய்து உண்டு சென்றுகொண்டிருந்தார்கள். இவர்கள் எச்சாதி எம்மதம் என்ற கேள்வியே கிடையாது. "உண்மையாய் இரு; அன்பாய் இரு; உழைத்துப் பிழை; அறிவை வளர்"—இந்த நான்கு திருமொழிகளும் இவர்களது உள்ளத்தில் பதிந்திருந்தன. பண்ணைக் குழந்தைகளில் சிலர் பெற்றோரால் காப்பாற்ற முடியாமல் தெருவில் விடப்பட்ட அநாதைக் குழந்தைகள்; சிலர் திருக்குலக் குழந்தைகள்; இரண்டு வெள்ளைக்காரக் குழந்தைகளும் இருந்தார்கள்; ஐந்து பேர் இஸ்லாமியக் குழந்தைகள்; ஆறு கிறித்தவக் குழந்தைகள்; ஒரே பிராமணக் குழந்தை-**சூரியன்**. எல்லாரும் சத்திய புத்திரரே; அன்புக் குழந்தைகளே! இவர்களுள் இருபது பேர் பெண் குழந்தைகள்; முப்பது பேர் ஆண் குழந்தைகள்; பெண் குழந்தைகளில் மிகவும் புத்திசாலி **கலிமா**; அவளே நம் கதாநாயகி.

கலிமா வந்த கதை விசித்திரமானது. **சூரியன்** அடிக்கடி திலகர் கட்டத்துக்குச் செல்வதுண்டு. அங்கே நாள் தவருமல் குருட்டு லப்பை ஒருவன் வந்து பிச்சை கேட்பான். அவனை ஒரு சிறுமி கழி பிடித்து வழி நடத்துவாள்; அவளே அவனுடைய கண், கண்மணி; மகள் தந்துசென்ற ஒரே செல்வம்!

அவளுக்காகவே அவன் உயிர் வாழ்ந்தான்; குணங்குடி மஸ்தான் பாடல்களை அவன் இனிமையாகப் பாடுவான். இந்தப் பெண்ணும் மழலை மொழியால் பின்னே பாடி வருவாள். சட்டை போட்ட ஆட்களின் முன்னெல்லாம் தந்தையை நிறுத்துவாள். தந்தை, தன் பரிதாபக் கதையைச் சொல்லிப் பிச்சை கேட்பான். சிலர் பைசா போடுவார்கள்; சிலர் அந்தப்புறம் ஒடுவார்கள். ஆனால், அந்தப் பெண்ணைக் கண்டு இரங்காதவரில்லை.

ஒருநாள் சூரியன் கடற்கரையில் பட்டாணி கொறித்துக்கொண்டே உலாவினான். கலிமா குருட்டுத் தந்தையைக் காட்டி, "ஐயா, பட்டினி" என்றாள். சூரியன் தன் பையிலிருந்த பட்டாணி முழுவதையும் அவளது தகரக் குவளையில் போட்டு, "தங்கச்சி, நாளைக்கும்வா, பட்டாணி தருவேன்" என்றான். "அல்லா உங்களைக் காப்பார்; நல்லாயிருங்களையா!" என்று அந்த இளங்குரலும் முதிய குரலும் சூரியனை வாழ்த்தின. மறுநாளும் இருவரும் வந்தார்கள்; பட்டாணி கிடைத்தது; இப்படியே தினம் இவர்கள் சந்திப்பதுண்டு. சூரியனுக்குக் கலிமாமீது அன்பு முதிர்ந்தது; அவளுக்குச் சோறுகூடத் தரத் தொடங்கினான். எது கிடைத்தாலும், அந்தச் சிறுமி, தந்தைக்கு ஊட்டியே, தான் உண்பது வழக்கம்.

ஒருநாள் பைக்ராஃப்ட்ஸ் தெருவில் பெரிய கும்பல். என்ன? மோட்டார் எமன் அந்தக் குருட்டுப் பிச்சைக்காரனைப் பலி வாங்கி விட்டது. "ஐயோ! பாட்டையா!" என்று கலிமா அழுதுகொண்டிருந்தாள். பிரேதம் புதைகுழிக்குப் போகப்போகிறது. அச்சமயம் சூரியன் வந்தான்; செய்தி அறிந்தான்.

கலிமாவுடன் அவனும் கண்ணீர் விட்டான். பிணப் புதைகுழி அடைந்தது. கலிமா சிறகிழந்த கிளி போலத் துடித்தாள்; அவளது வாழ்வில் ஒரு வெறுமை ஏற்பட்டது; அவளுடைய மனம் இருண்டது. அந்த இருளைப் போக்க வந்தான் சூரியன்; "கலிமா வா; எங்களுடன் இரு" என்று அழைத்து வந்தான்; "அப்பா, இவள் கலிமா; நல்ல பெண்; நம்முடன் இருக்கட்டும்" என்ருன். சிறுமியைப் பார்த்ததுமே சத்தியருக்கு ஒரு பாசம் உண்டாயிற்று; "வா, தங்கமே" என்று அந்தக் கந்தைச் சிறுமியை வாரி அணைத்து உச்சிமுகர்ந்து முத்தமிட்டார்; ஒரு பெரிய பெண்ணிடம் அவளை ஒப்புவித்தார். அன்று முதல் கலிமா ஒற்றுமைப் பண்ணையிலேயே ஒட்டுறவா யிருந்தாள்.

கலிமா, நல்ல சிவப்பு; மலர் விழி, கிளி மூக்கு, களை நிரம்பிய முகம், புன்னகை வாய், அன்பு நிரம்பிய உள்ளம் உடையவள்; அந்த உள்ளத்தைப் பற்றிய கவலை யிருள் ஒழிந்தபின், அவளது வாழ்வெல்லாம் புன்னகை வெள்ளமாயிற்று. அவள், காரியத்தில் கருத்துடையாள். சத்தியர், யாரையும் வற்புறுத்துவதில்லை. "இதை யார் செய்கிறீர்கள்?" என்று கேட்பார்; "நான், நீ" என்று முறை வைத்துக் கொண்டு பிள்ளைகள் செய்வார்கள். கலிமா உழைப்புக்குச் சலிக்க மாட்டாள்; உள்ளன்புடன் உழைப்பாள்; ஒரு தாய்போல எல்லாரையும் நேசிப்பாள். அவள் எப்படியோ, அப்படியே சூரியனும். சூரியனே அவள் குரு; அவனே அவளுக்கு எண்ணும் எழுத்தும் சொல்லித் தந்தான்; கலிமா வெகு எளிதாகப் பாடம் கற்ருள். ஆடல் பாடல்களிலெல்லாம் அவள்

சூரியன் பக்கமே யிருந்தாள். அவனைக் காணுவிட்டால், அவள் உள்ளம் துடிக்கும். இப்படியே வளர்ந்த ஏழைக் குழந்தைகள், வயதாக ஆக அறிவிலும், தொழிலிலும், அன்பிலும் முதிர்ந்தார்கள்.

இப்போது சூரியன் இருபதுவயதுக் காளை; முகத்தில் மீசை முளைத்துவிட்டது; மாகாணக் கல்லூரியில் படித்து, பி. ஏ. யும் தேறிவிட்டான். கலிமா பதினைந்து வயதுப் பெண்; பருவமடைந்து வசந்தத் திருவெனப் பொலிகிருள். அவளுக்குத் தமிழ் ஆங்கிலம் இரண்டும் எழுதப் படிக்கத் தட்டில்லாமல் வரும்; ஒற்றுமைப் பண்ணையில் பெண் குழந்தைகளுக்கு அவள் பாடம் சொல்லித்தருகிருள். சத்தியருக்கு வயதாகி விட்டது; உடல் தளர்ந்தது; மகனிடம் பண்ணைப் பொறுப்பை விட்டு ஓய்வுகொள்ள நினைத்தார். ஓர் ஆசைமட்டும் தந்தை யுள்ளத்தை விடவில்லை: மகனுக்குத் திருமணம் புரியவேண்டும் என்பது. அவர் பாரிஸ்டராதலால், கொஞ்சம் அந்தஸ்துள்ள இடத்தில் பெண் பார்த்தார். சூரியனின் அழகு எத்தனையோ செல்விகளை வசீகரித்தது; சத்தியநாதரின் தங்கை, தன் மகள் கௌரியைத் தருவதாகப் பிடிவாதம் செய்தாள். 'சொத்து இரண்டு லகாரம், ஒரே பிள்ளை, படித்தவன், பெரிய இடம்' என்ருல் கேட்க வேண்டுமா? முன்னே அவரை வெறுத்து விலக்கியவர்கள் கூட இப்போது வந்து கெஞ்சினர்கள். "இந்தக் கட்டிடத்துக்குள் வந்தவர்கள் சாதி மத வேற்றுமையை விட்டுவிட வேண்டும்; கலந்துண்ண வேண்டும்" என்று சத்தியர் சொன்னர். சம்மதம் என்ருர் ஹைக்கோர்ட்டு வக்கீல் சங்கரையர். அவருடைய பெண் ஜகன்மோகினி; ஸ்கூல்ஃபைனல் தேறி

யவள்; பதினாறு வயது யுவதி; நவீன நாகரிகத்தின் வடிவம். உதட்டுச் சாயம் முதல், கைக்குட்டை வரையில் நவீன நடையுடை பாவனைகளில் அவள் தேர்ச்சி பெற்றவள். அவளே சூரியனை ஒருதரம் மெரீனாவில் கண்டுபேசிக் கண்வலை வீசிப்.பார்த்தாள். சத்தியருக்கும் அந்தப் பெண் பிடித்திருந்தது. சடங்கில்லாமல் பிரசங்கம் நடத்தி, பாட்டுக் கச்சேரி வைத்து, இருவரையும் இணைப்பது என்று பெற்றோர் முடிவு செய்தார்கள். பெண்ணைப் பெற்றவருக்கு இரட்டை மகிழ்ச்சி; சாதாரணமாகக் கலியாணத்துக்கு ஆகும் செலவை (ரூ. 5000) இருவரும் பகிர்ந்துகொண்டு ஒற்றுமைப் பண்ணைக்குத் தருவதென்று தீர்மானம் செய்தார்கள். சங்கரையர் கைமேல் ரூ. 2500 தந்து விட்டார். சத்தியரும் அதே தொகை போட்டு ஒரு வைத்தியசாலை வைப்பதாக முன்வந்தார்.

அடுத்த வாரம் கலியாணம்; எல்லாரும் குதூகலமாய் இருக்கிறார்கள்.

இருவருடைய உள்ளங்கள் பகீர் என்று தீப் பிடித்தது போல் எரிந்தன. ஒருவன் சூரியன்; ஒருத்தி கலிமா. இருவரின் உள்ளங்களும் மின்சாரத்தின் இரண்டு கம்பிகள்போல் இணைந்திருந்தன; இனிப் பிரிந்தால் வாழ்வில் ஒளியிராது, ஓட்டமிராது, இன்பமிராது. தகப்பனாருக்கு இது தெரியாது.

'தம் மனமே, மகளின் மனம்' என்று அவர் நினைத்திருந்தார். கலிமாவின் முகத்தில் படிந்த கவலைக் கண்ணீரை மட்டும் அவர் அடிக்கடி கவனித்ததுண்டு. காரணம் கேட்ட போதெல்லாம் கலிமா தலை குனிந்து கண்ணீரால் பதில் சொன்னாள்; வாய்திறக்கவில்லை, ஜகன்மோகினி கட்டை விரல் நுனியைச் சப்பிக்

கொண்டு, கைக் குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, நாவல்படித்துக்கொண்டே தோட்டத்தில் உலாவுவாள்; அவளை வனதேவதைபோல வணங்கும் வாலிபரும் உண்டு. ஆனால், சூரியனுக்கு அவளது அழகுச் செருக்கு, சிறிதும் பிடிக்கவில்லை. அவள் தன்னை அளவுமீறி அலங்கரித்துக் கொள்வதிலும் நாவல் படிப்பதிலும் வம்பளப்பதிலுமே காலங்கழிப்பாள்; தனது குறிக்கோளுக்குத் துணையாகமாட்டாள் என்பதை அவன் அறிவான். இருந்தாலும் தன்னை அன்புடன் பேணி வளர்த்த தந்தையை மீற முடியவில்லை; அவருடைய தீர்மானத்துக்கு எதிர்செய்ய முடியவில்லை. கலிமாவையும் அவன் மறக்கமுடியாது. அவன் மனங்கலங்கி நின்றான். மோகினியைக் கலிமா நன்றாகக் கவனித்துப் பார்த்திருக்கிறாள். அவளிடம் இருந்த ஒரு குறை கலிமாவுக்குத் தெரியும். ஆனால் அதை வெளியாக்கிக் காரியத்தைக் கெடுக்க, அவள் நினைக்கவில்லை.

ஒருநாள் கலிமா முல்லைக்குத் தண்ணீர் வார்த்துவிட்டு, அப்படியே கண்ணீர் விட்டு உட்கார்ந்துவிட்டாள். அந்தி வானம் இரத்தமயமாய் இருந்தது; சூரியன் வந்தான்.

—"கலிமா உன் கவலை என்ன? உன் முகம் இருண்டதேன்? கண்ணில் துன்பம் ஊறுவதேன்? மனமலர் குவிந்ததேன்?"

—"சூரியனில்லாது மனத்திற்கு மலர்ச்சியுண்டா? முகத்துக்கு ஒளியுண்டா? கண்ணுக்குக் காட்சி உண்டா? சூரியன் வேறொரு மலரில் கதிர்வீசுகிறது; இந்த மலரில் இருள் படர்ந்தது. இனி, இது

சோர்ந்து வாடிக் கண்ணீர் வெள்ளத்தில் விழ வேண்டியது தானே ?''

—“கலிமா, என் கண்ணே, இதற்காகவா வருந்துகிருய்? உன்னை நான் மறந்து பிழைக்கவா? நான் சூரியன்; நீ கதிர். என்ன வந்தாலும் உன்னை விடமாட்டேன்.''

—“இதோ, மணையில் உட்காரப் போகிறீர்கள்; உமது வாழ்வை மகிழ்விக்க ஒரு மோகினி இருக்கிருள்; என்னை இனி மறந்து விடுங்கள்; நான் தெருத் தூசியிலிருந்து வந்தேன்; தூசியில் மறைகிறேன்.''

—“கலிமா, அவள் என்னை மகிழ்விக்க முடியாது; எனக்கு உகந்தவள் நீயே! என் தகப்பனுர் மனம் திரும்பவேண்டும்; அதற்கு வழி தெரியாமலே தயங்குகிறேன். அவர் அவளைத் தேவலோக ரம்பை என்று மயங்கி யிருக்கிருர்.''

—“அந்த மயக்கம் நீங்குவது மிக எளிது. நாளையே மோகினி வரட்டும். அவள் குணத்தைக் கைக்கு மெய்யாக அவருக்குக் காட்டி விடுகிறேன்; பிறகு நடப்பதைப் பாருங்கள்!''

—“எப்படிக் காட்டுவாய்?''

“நான் சொல்லக் கூடாது; தானே வெளிப்படும்......''

மகன் தந்தையிடம் தெரிவித்தான்; தந்தை ஆவலாக நாட்டுப் பெண்ணை அழைத்தார். பெண் நாகரிகத் தளுக்கில் ‘டக், டக்’ என்று திமிர் நடை போட்டு வந்தாள்.

தோட்டத்தில் கூட்டாஞ்சோறு உண்ண ஏற்பாடு செய்திருந்தது. கலிமா அன்று மிகநன்ருகச் சமைத்திருந்தாள். சத்தியர் நாட்டுப் பெண்ணை

முகமலர்ந்து வரவேற்ருர். அவள் 'குட் ஈவினிங்' என்று உள்ளே வந்தாள். அவளுடைய மஸ்லின் உடை, செருக்கு நடை, சாயமினுக்கு, போலிநகை, அகம்பாவப் பார்வை - இவற்றைக் கண்டதுமே, சூரியன் ஒருபுறம் ஒதுங்கி நின்ருன். அவள் நேராக அவனிடம் வந்து கைகுலுக்க விரும்பினுள்; அவன் அவளைப் பார்க்கவேயில்லை. "இன்ஸல்ட்" என்று மனத்தில் சொல்லிக்கொண்டாள்; நகத்தைக் கடித்துக் கொண்டே, சிறிது அப்படி இப்படி நடந்தாள். கலிமா அநாதைக் குழந்தைகளுக்குப் பூச்சூட்டி அழைத்து வந்து, "மோகினி, நீதான் நாளை இந்தப் பண்ணையின் தாய்; இவர்கள் உன் குழந்தைகள்" என்ருள்.

"யார் இந்தத் தரித்திரங்கள்?" என்று முகச் சுளிப்பால் காட்டிப் பிறகு, ஒரு போலிநகை பூத்தாள் மோகினி. இதற்குள் ஓர் அநாதை மதலை, "அம்மா, அம்மா" என்று அவளது இடுப்பைக் கட்டிக் கொண்டது. "ஆ, சீ போ, தரித்திரமே!" என்று குழந்தையை ஒரு தள்ளுத் தள்ளினுள். அன்பையே அறிந்த குழந்தை திடுக்கிட்டு விழுந்தது. கலிமா, அதை எடுத்து அணைத்து தேற்றினுள்; "அசடே! அம்மாவின் இடுப்பைத் தொடாதே, வலிக்கும்" என்ருள். இதைக் கேட்ட சூரியனுக்கு உண்மை தெரிந்து விட்டது. மோகினிக்கு இடுப்பில் பிடிப்பு; நரம்பு இறுகிவிட்டது; குனியமுடியாது; வணங்காது, விறைப்பாக நடப்பாள்; நாற்காலியில் சாய்ந்தவாறு இருப்பாள். குணமோ கொள்ளி; யாரும் பொருட்டில்லை; அன்பு பூச்சியம். சூரியன் இதை அறிந்து தகப்பனுரிடம் சொன்னுன். அவள் குழந்தையைத்

தள்ளிய போதே, அவருக்கு ஒரு மாதிரி யிருந்தது. இடுப்பு விஷயத்தைச் சோதிக்க விரும்பினர். அதற்காக, இலே போடப்பட்டதும், "மோகினி! நீயும் பரிமாறு!" என்ருர். "நானென்ன சமையல்காரியா?" என்று ஒரு தீக்கண் வீசி, மோகினி நிமிர்நடை போட்டுச் சென்றுவிட்டாள். உண்மை விளங்கியது...சத்தியர், கலிமாவை அன்புடன் பார்த்தார்; மகனை மகிழ்வுடன் நோக்கினர். சூரியன் கலிமாவின் கையைப் பிடித்துக்கொண்டு தந்தையிடம் வந்தான்; நமஸ்கரித்தான்; "அப்பா, இவளே என் வாழ்வுத் துணைவி; எங்களை ஆசீர்வதியுங்கள்!" என்ருன். சத்தியர், முன்பே அறிந்தார். "கண்மணிகளே, இருவரும் ஒற்றுமைப் பண்ணைக்கு ஒளியும் கதிரும் போலிருங்கள்!" என்று ஆசீர்வதித்தார். **கலிமா—சூரியன்,** ஒற்றுமைப் பண்ணையின் உடலும் உயிருமானர்கள். சத்தியரின் கொள்கை நிறைவேறியது; ஒரு நாள் பண்ணைக் குழந்தைகளுக் கெல்லாம் அன்பு சொல்லி, அவர் விடைபெற்றுக் கொண்டார். ஒரு வாரம் படுக்கை; பிறகு அவரது உயிர்க் கிளி கூட்டைவிட்டோடியது. ஒற்றுமைப்பண்ணைக்குக் கலிமா தாய், சூரியன் தந்தை; அங்கே எல்லாச் சாதி மதத்தினரும் உண்டு; எச்சாதி மதமும் இல்லை. எல்லாரும் தலைநிமிர்ந்து நடப்பார்கள்; ஆனல், அந்த ஸ்தான், இந்த ஸ்தான், என்ற எல்லைச் சுவர் கிடையாது. எல்லாரும் **இதயஸ்தானத்**தில் கூடிவாழ்ந்தனர்!

2. காதற் கைதிகள்

எல்லையற்ற கடல்; அதன் கரையில் சென்னை உலாவுகிறது. இந்நகரில் எத்தனைப் பேச்சு நடை உடை பாவனைகள் உண்டோ, அத்தனையும் அங்கே அரங்கேறுகின்றன. மஞ்சள் வெய்யில் மணலைக் கொஞ்சுகிறது. உருக்கி வார்த்த மரகதப் பளிங்குபோல் கடல் அலைகள் மின்னித் தாவுகின்றன. மீன் படகுகள் கரைக்கு வருகின்றன. படகிலிருந்து இறங்கும் கணவரின் மீன்கூடைகளை மனைவியர் அன்புடன் வாங்கிச் செல்லுகின்றனர். அன்பினால் கட்டுண்ட எத்தனையோ காதலர்கள் கடற்கரையில் கட்டற்று உலாவுகின்றனர். கல்லூரி மாணவர்கள் வேடிக்கையாக அரட்டையடிக்கின்றனர். துண்டை விரித்து பரப்பிச் சிலர் "பிரிட்ஜ்" ஆடுகின்றனர். சிலர் வெள்ளித்திரை நிகழ்ச்சி பேசுகின்றனர்; நட்சத்திர மண்டலத்தில் தம் மதியூகங்களை உலாவவிடுகின்றனர். சிலர் கடலோரத்தில் கைகோத்து உலாவுகின்றனர். கல்லூரி மாணவிகள் அன்னக்கூட்டங்கள் போல் அங்குமிங்கும் அமர்ந்து மணலைக் கொந்திக்கொண்டே ஆங்கிலத் தமிழில் தங்கள் தனிச் செய்திகளைச் சரமாரியாகப் பேசுகின்றனர்!

இத்தனைக் காட்சிகளுக்கிடையே எப்படியோ அந்த இரண்டு உள்ளங்கள் ஒன்றையொன்று ஈர்க்கின்றன; நாக்கினால் நண்பருடன் பேசிக்கொண்டே கண்களால் தமக்குள் பேசுகின்றன.

அதோ! வானவில்லை வட்டமாக வளைத்து வைத்தது போல் ஏழு மாணவிகள் மெரீனுவுக்கருகே உட்கார்ந்து பேசுகிருர்கள். அவர்கள் அழகு, விதவித வர்ணச் சேலைகளால் பளிச்சிடுகிறது. எல்லோர் முகத்திலும் நாகரிகச் சாயம் மின்னுகிறது. என்ருலும் **சாவித்திரி**யின் முகக்களையே தனியாயிருக்கிறது. அவள் திருமுகத்தை இன்னும் சிறிது பார்த்துச் செல்லவே சூரியன் தாமதிப்பதுபோ லிருக்கிறது. அவள் சிரிப்பு ஜலதரங்கம் போலக் காற்றில் மிதந்து வருகிறது. இடையிடையே அவள் கண்ணம்பு அதோ, அங்கே பாய்கிறது—சூட்சுமமாகத்தான்!

அங்கே இளங்காளைகள் சிலர் பத்திரிகையைப் படிப்பதும், உலக நடப்புகளைப்பற்றி உணர்ச்சியுடன் வழக்கிடுவதுமா யிருக்கிருர்கள். அவர்களுக்கு நடு நாயகமாக விளங்கும் அந்த வாலிபனே— **சாமிநாதன்.** ஆள்நல்ல உயரம்; பருமன்; நிமிர்ந்த பார்வை; கூர்ந்த மூக்கு; மலர்ந்த முகம்; சிரித்த வாய்; பழகப் பழக இனிக்கும் அன்பு; நிரம்பப் படித்த மூளை; தேசபக்திக் கனல்; அடிமை என்ற வார்த்தையைக்கூடச் சகிக்காத ஆண்மை—இவையே **சாமிநாதன்** B. Sc. சாவித்திரியின் கண்கள் அவன் கண்களுடனேதான் அடிக்கடி பேசுகின்றன. அவை எப்படிப் பேசுமோ! அவற்றின் பேச்சிற்கு மனமே இலக்கணம்; பார்வையே இலக்கியம்!

கையெழுத்து மறைகிறது; இருள் பரவுகிறது; இருட்டடிப்பு நாள். கடற்கரை திடீரெனக் காலியாகிறது. தோழிகளுடன் செல்லும் சாவித்திரி, "ஆ மறந்து போய்விட்டேனே!" என்று மறுபடி அதே இடத்திற்கு வருகிருள். ஒரு கைக்குட்டையை அங்

கிருந்து எடுத்துச் செல்லும்போதே, பின்னுல் ஒரு பார்வை பார்த்து மெல்லச் சிரித்துத் தலையை ஒரு குலுக்குக் குலுக்கி இடுப்பைப் பூங்கொடிபோல் வளைத்து வளைத்து ஓடி மறைகிருள். சாமிநாதன் உள்ளம் பூரிக்கிறது. அவன் உள்ளத்தில் அவள் குடிகொண்டு விளையாடுகிருள். ஆயிரம் கனவுகளை மனதிற் சுமந்து அவன் கல்லூரி ஹாஸ்டலுக்கு வருகிருன்; ஆவலாக ஒரு கடிதத்தைப் பிரித்துப்படிக்கிருன்.

மறு நாள் அந்திமாலையில் சாமிநாதன் மீன் காட்சிசாலையருகே ஆவலாக நின்ருன். ஒரு கண் "**ஹிந்து**"வில்; ஒரு கண் எதையோ எதிர்பார்க்கிறது. காட்சிசாலையிலிருந்து ஒரு மீன்விழி வருகிருள்; அவளே—சாவித்திரி. "நல்ல செய்திதானே?" என்று கேட்டாள் சாவித்திரி.

சாமிநாதன்: நல்ல செய்தி! ஸ்டாலின் இரண்டாம் போர் முனை வேண்டுமென்று கரடியாய்க் கத்தினுர்; இதோ, டூனிஸ் வெற்றியானதும் பிரிட்டிஷ் எட்டாம் படை ஸிஸிலியைப் பிடித்து, மெஸ்ஸீனுவிலிருந்து இத்தாலியைப் படையெடுத்து முன்னேறி, ரோமில் குண்டுமாரி பொழிகிறது. இத்தாலி சரணடைந்தது.

சாவித்திரி: வாழ்க்கைப் போரும் இப்படித்தான் நடக்கிறது! தருமத்தைச் சரணடைந்தாலே மனிதனிடமுள்ள அசுரகுணம் ஒழியும். ரஷ்யாவில் ஹிட்லர் மறுபடியும் மூர்க்கத்தனமாகத் தாக்குகிருரே—

சாமி: இதோ மாஸ்கோ பக்கத்தில் அடிவைக்காமல் சோவியத் சேனை நாஜிகளைத் துருவி யெறிகிறது.

பெர்லினிலும் மூனிச்சிலும் பலமான குண்டு வீச்சு நடக்கிறது.

சாவி : ஆ, பார்க்கப்போனுல் எல்லாரும் பரமசாது வான ஏசுவின் தாஸர்; ஒரே வெண்ணிறத்தார்; ஒரே கண்டத்தார். ஸயன்ஸ் அறிவைக் கொண்டு கொலை செய்து கொள்கிருர்களே! இன ஒற்று மையில்லாத குற்றமே—

சாமி : மன ஒற்றுமையிருந்தால் இனவொற்றுமை யிருக்கும். இனமும் மனமும் சேர்ந்ததே இன்பம்; அந்த இன்பம் எல்லாருக்கும் கிடைக்கிறதா? நாமொன்று நினைத்தால், நம்மவர் ஒன்று நினைக் கிருர்கள்.

சாவி : என் கதையும் அப்படித்தான்!

சாவித்திரி இரண்டு நிமிஷம் ஏதோ சிந்தையில் ஆழ்ந்தாள். மின்சாரச் செருக்கிழந்த சென்னையை இருள் அள்ளி விழுங்கிக் கொண்டிருந்தது; நல்ல தனிமை. இருவர் உள்ளத்துடிப்பைத் தவிர வேறு சப்தமில்லை. எங்கும் இருட்டடிப்பு. இருவர் நட்பும் கலந்தது; உள்ளமும் உள்ளமும் ஒன்ருன பிறகு பேச் சில் ஒளிவென்ன?

சாமி : சாவித்திரி, உனது நட்பு எனக்குப் பேரின்ப மளிக்கிறது. நீ எதைப்பற்றிக் கவலைப்படுகிருய்? சொல்!

சாவி : வாழ்வே கவலைதானே; நாம் விரும்பியதைப் பிறர் தடுத்தால், மனதிற்குச் சாந்தமேது?

சாமி : அம்மா, நீ விரும்புவது என்ன? நான் நிறை வேற்றுகிறேன். உன் பெற்ருேர் யார்? சகோ தரர் உண்டா? விவரமாகச் சொல்!

சாவி : நான் ஒரு துர்ப்பாக்கியவதி; தாயை இழந்தேன்; தாய்மாமன் காஞ்சிபுரத்தில் இருப்பதாகக் கேள்வி. அவருக்கு ஓர் ஆண் மகனும்; நான் யாரையும் அறியேன். ஜாதகம் பொருந்தியிருக்கிறதாம். அவனையே நான் மணக்க வேண்டுமாம். என் அண்ணனும் அவருடன் சேர்ந்து வற்புறுத்துகிறான்; என் மனமெல்லாம் தங்களிடம் உள்ளது; தங்களுடன்கூட நாட்டுக்கே தொண்டு செய்து வாழ நான் விரும்புகிறேன். நான் இந்த ஆண்டுடன் இன்டரில் தேறிவிடுவேன்; பிறகு உபாத்திமைப் பயிற்சி பெற்று, பெண்களுக்காகக் கல்வித் தொண்டு செய்ய விரும்புகிறேன். தியாக உணர்ச்சியுடன் வாழக்கூடிய ஒரு கணவனை நான் கண்டு கொண்டேன். என் காதல் இனிப் பிறரிடம் செல்லாது!

சாமி : சாவித்திரி, என் மனமும் அதே உறுதி கொண்டிருக்கிறது; மனிதன், உள்ளமட்டும் ஊருக்கு உதவியாக வாழவேண்டுமென்பதே என் கொள்கை. அதற்கேற்ற வாழ்க்கைத்துணைவி நீதான். எனக்கும், தந்தை ஒரு பெண்ணைத் தீர்மானித்து வற்புறுத்துகிறார். அவள் அழகியாம்; படித்தவளாம்; தாயில்லாப் பெண்ணும்; அடங்கியிருப்பாளாம்!

சாவி : என்னைக் கைவிடக்கூடாது....

சாமி : நீயே என் உயிர். அம்மா, உன் அண்ணன் என்ன செய்கிறான்?

சாவி : இதோ, இந்த பைக்ராஃப்ட்ஸ் தெருவிற்கு ஏ. ஆர். பி. வார்டனாயிருக்கிறான்; என்னை ஒற்றன் போலத் தொடர்ந்து கண்காணிக்கிறான்.

சாமி : இந்தத் தெரு வார்டனா? சுந்தரமா?

சாவி : ஆம்.

சாமி : அப்படியா? என் சுந்தரமா? அம்மா, உன் தகப்பனார் பெயரென்ன?

சாவி : டாக்டர் கோபாலன்.

சாமி : அப்படியா? உன் மாமா பிள்ளையின் பெயர்?

சாவி : சாமிநாதனாம்—தங்களுக்குத் தந்தை பார்த்திருக்கும் பெண் பெயரென்ன?

சாமி : சாவித்திரியாம்!

சாவி : நானே **சாவித்திரி**!

சாமி : நானே **சாமிநாதன்**!

இச் சமயம் பளிச்சென்று ஒரு மின்சார ஒளி அடித்தது. "யாரிங்கே? உடனே பதில்!" என்று ஓர் அதிகாரக் குரல் கேட்டது.

சாமி : ஐயா, நாங்கள் உலாவ வந்தோம்; காற்று வாங்குகிறோம்.

அதிகாரி: இங்கே இப்படியிருந்தால் தண்டனைக்குள்ளாவீர்கள். உங்களைக் கைது செய்கிறேன்.

சாமி : ஐயா, கிட்ட வாருங்கள்; கேளுங்கள்!

ஆள் கிட்டே வந்தான்; ஏ. ஆர். பி. சுந்தரந்தான்... "அட சாமிநாதனா! சாவித்திரி, நீதானா இருட்டடிப்பில் தினம் இங்கே பேசுகிறாய்! உங்களைக் **கைது** செய்ய வந்தேன். நீங்கள் ஏற்கனவே **காதற்கைதிக**ளானீர்கள்; சந்தோஷம். சாவித்திரி, இவர்தாம் உன் மாமன் மகன் சாமிநாதன்! சம்மதந்தானே?"

சாவித்திரியின் மோகன முறுவல் மின்சாரத் தீவட்டியை வெட்கச் செய்தது!

சாமி: அட சுந்தரமா? ஏ. ஆர். பி. அமுல் நடக்கட்டுமே. இனி, எங்களைக் கைதுசெய்து சிறையிடலாமே!

சுந்தரம்: இதோ காதல் கைதியாகச் செய்து இப்படியே வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன்; நாளையே இருவரையும் **இல்லறச் சிறையில்** அடைத்து விடுகிறேன்!

ஹ! ஹ! ஹ! மூவர் சிரிப்பும் கடற் காற்றில் கலகலவென்று நடம் புரிந்தது—இருட்டடிப்பில் எழுந்த காதல் மறுபகலே நிறைவேறியது!

3. சுதர்சன

'எழுந்த சூரியன் விழுகிறது. மலர்ந்த பூ உதிர்ந்து மண்ணுகிறது. உலகில் ஆக்கமும் அழிவும் இயல்புதான். அழிவின் மண்ணிலிருந்தே ஆக்கம். செடி பூத்துக் காய்த்து மண்ணுகி மற்றெரு செடிக்கு உரமாகிறது. ஜீவநாடகம் இதுவே ...'

என்று இப்படியே சிந்தித்துக் கொண்டிருந்தார், சேனுபுரி மிராசுதார் **சாம்பசிவம்.** அவருக்கு **உமா** முதல் தாரம். நல்ல அழகி; அன்பு மயம். உமா அவருக்கு எல்லா இன்பங்களும் அளித்தாள். நேற்று வரையில் உமா, 'வாழ்வே சுவர்க்க போகம்' என்று நினைத்தாள். இன்றுதான் அவளுக்குத் துக்கம் இன்னதென்று தெரிந்தது. உள்ளே உமா, பிரசவ வேதனைப் படுகிருள். மருத்துவச்சி மருத்துவம் பார்க்கிருள். "ஐயோ அப்பா, சிவா, நாராயணு!" என்று உமாவின் அபயக்குரல் கேட்கிறது. "ஐயோ! புன்னகை குலுங்கிக் கொஞ்சிக்கொஞ்சிப் பேசும் நம் இன்பக் கிளிக்கு இந்தத் துன்பம் ஏன் கொடுத்தோம்!" என்று சாம்பசிவம் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தார்; "ஹா, பிறவி எவ்வளவு துன்பம்!" என்று இடையிடை வேதாந்தமும் பேசினர்.

மணி ஆறு. "குவா குவா" என்று சப்தம் கேட்டது. "ஹா, குழந்தை பிறந்துவிட்டதா!" என்று ஆவலாக மருத்துவச்சியை வினவினர் சாம்பசிவம்:

குழந்தை பிறந்தது!

அப்படியா?

என்ன குழந்தை?

பெண்!

சரி, அதனுல் என்ன? உமா சௌக்கியமா யிருக்கிருளா?

மயக்கம் போட்டுக் கிடக்கிருள்.

ஐயையோ, உமா பிழைப்பாளா?

இப்படிச் சாம்பசிவம் ஆவலாகக்கேட்கும்போது, 'ஹா சிவனே!' என்ருெரு பெருமூச்சு, ஓர் அலறல்; உமா உலகினின்றே விடைபெற்ருள்! உறவினரெல்லாரும், "இந்தப் பீடை பிறக்கும்போதே தாயாரை உருட்டிவிட்டது" என்று அந்தப் பச்சைக் குழந்தையின்மேல் எரிந்து விழுந்து, அதை அலட்சியமாக அப்புறம் போட்டனர். உள்ளே மாரடிப்பு, பிலாக்கணம். "ஐயோ உமா, என்னை விட்டுப் போய்விட்டாயே" என்று இங்கே சாம்பசிவம் கலங்கிப் புரண்டழுதார். உலக வாழ்க்கையில் இரு விகாரம் எப்படி இருக்கிறது? குழந்தை பிறந்ததற்கு மகிழ்வு; தாய் இறந்ததற்குத் துயரம்.

சிலர், குழந்தை ரோஜாப்பூ மாதிரி இருக்கிறதே, என்று கொஞ்சுகிருர்கள்; சிலர், அங்கே உமாவின் உடம்பைக் கழுவிக் குளிப்பாட்டிப் பாடையில் வைக்கிருர்கள். சிலர் குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுகிருர்கள்; சிலர் உமாவுக்காகப் பிலாக்கணம் பாடுகிருர்கள்.

உமாவின் காரியம் இவ்வாறு முடிந்தது. துக்கம் பத்து நாள். பிறகு குழந்தை முகம் அவருக்கு ஆறுதலளித்தது. குழந்தைக்கு **உமா கௌரி** என்று பெயர் வைத்துச் செல்வமாக வளர்த்தார் சாம்பசிவம். குழந்தையும் தாயைப்போலவே இருந்தது. அதே முத்து நகை, அதே முகலாவண்யம்!

சிவம் ஆறு மாதம் மறுமண நினைவில்லாமலே காலங் கழித்தார். உறவினர் 'நான், நீ' என்று பெண் கொடுக்க முன்வந்தனர். அவருக்கு யாரையும் பிடிக்க வில்லை. ஆனல், பாசமும் விடவில்லை. முப்பத்தைந்து வயதுக் காளை துறவிபோல் வசிக்க முடியுமா? அவர் ஒரு மிராசுதார்; செல்வமும் செல்வாக்கு முடையவர்; உடலுறுதி கொண்டவர். அவர் தன் அந்தஸ்திற்கு ஏற்றபடி படித்த பெண்களை விரும்பி நாகரிகச் சந்தை யில் தேடினர்.

அங்கே, அவருக்கு வாய்த்தவள் **லீலா**. இருவரும் ஒரு பேசும்படக் கொட்டகையில் சந்தித்தனர், அள வளாவினர், நட்புக்கொண்டனர், காதலித்தனர், மோதிரத்தை மாற்றிக்கொண்டனர். ஒரு வாரத்தில் இருவரும் ஒருவராயினர். லீலா தன் பிறப்பு வளர்ப்பு களைமட்டும் மறைத்து விட்டாள். அதை நாமும் கேட் பானேன்? கணவனுக்கும் மனைவிக்கும் பிடித்துப் போனது; இனி என்ன?

லீலா புன்னகையுடனேதான் வந்தாள்; குழந்தை கௌரியைக்கூட, "என் கண்ணே! முத்தே!" என்று கொஞ்சினுள்.

அடுத்த ஆண்டு அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது; பெயர் மல்லிகை. லீலா சாயம் பூசிப் பொய்ப்பல் வைத்துக்கொள்ளாவிட்டால் எப்படி இருப்பாளோ, அதே நிறம்; அதே சப்பை முகம். குழந்தை பிறந்ததும் அவள் ஆசையெல்லாம் அதன் மேல் போனது. கௌரியைக் குப்பைபோல் ஒதுக் கினுள். சிவம் கௌரியுடன் கொஞ்சிக் குலாவிப் பிரிய மாயிருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. சிவத்திற்கு அழுமூஞ்சி மல்லிகாவைத் தொடக்கூடப் பிடிக்க

வில்லை. அதனல் இருவருக்கும் மனத்தாங்கல், நாகரிக மான கிண்டல் எல்லாம் நடந்தன. லீலாவின் சாயமும் கொஞ்சம் கொஞ்சமாக வெளுத்தது. அவளுடைய சாகசம், போலி மினுக்கு, தற்புகழ்ச்சி, கேலி, கிண்டல், நாத்திகத்தடிப்பு, வாயாடித்தனம், பிடி வாதம், இடம்பம், எதிர்ப்பு, முடிவில் கணவனை 'மிஸ்டர் சிவம்' என்று அழைத்து வந்தது - எல்லாம் அவருக்குப் பிடிக்கவில்லை. ஆசை ஆறு மாதம், மோகம் மூன்று மாதம் என்ருயிற்று. 'இவளை ஏன் கட்டிக் கொண்டோம்?' என்று அவர் அடிக்கடி நொந்துகொண்டார்.

லீலாவுக்குக் கௌரியைப் பார்த்தால் கடுகடுப்பா யிருந்தது. ஒரு முறை சிவம் குடும்பத்துடன் சென்னைக் கிறிஸ்துமஸ் வேடிக்கை பார்க்கச் சென் ருர். பார்க்கில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த போது, கௌரி எங்கோ தவறிவிட்டாள். சிவம் பதற்றமாகத் தேடினர்; குழந்தை அகப்படவில்லை. லீலா ஒருசொட்டு நீலிக் கண்ணீர் வடித்துப் பிறகு, "போன சனியனுக்கு அழுவானேன்?" என்றிருந்தாள். கௌரியை அவளே தன் கையாள் ஒருவனிடம் கொடுத்து அநாதையாக எங்கோ விட்டுவிட ஏற்பாடு செய்தாள் என்பதைச் சிவம் அறியார். இரண்டு வய துப் பிள்ளை என்னவானதோ என்று சிவம் அடிக்கடி புலம்பினர். "அதையே நினைக்கிறீரே, மிஸ்டர் சிவம்; என் மல்லிகை இருப்பது பிடிக்க வில்லையோ?" என்று லீலா சண்டைக்கு வந்தாள்.

அவள்முன் சிவம் வாயைத் திறக்க முடியவில்லை; ஆனல், மறைந்த கௌரி ஒருநாள் வருவாள் என்றே நம்பியிருந்தார்.

பன்னிரண்டாண்டுகள் கனவுபோலச் சென்றன. லீலாவின் அழகெல்லாம் வயதால் வாடியது! எவ்வளவு "மேக் அப்" செய்தாலும், எத்தனை சாயம் பூசினாலும், நரை திரையை மாற்ற முடியுமா? சாயத்திற்குமேல் அவலட்சணம் பளிச்சென்று தெரிந்தது. மனத்தில் மட்டும் இன்னும் தான் தேவலோக ரம்பை என்றே அவளுக்கு நினைப்பு. இயற்கைக்கு விரோதமான உணவாலும், பூச்சாலும், நடைகளாலும் பல நோய்கள் அவளைப் பற்றிக்கொண்டன. மல்லிகாவை அவள் இரதியென்று துதித்தாலும், பார்ப்பவர்கள் கண்ணை மூடிக்கொள்ளும்படி இருந்தது பெண்ணின் அவலட்சணம்; சப்பை மூக்கு, சாளைவாய், குரங்குக் கண், கொள்ளிப் பார்வை, தெத்துப்பல், திக்குவாய், கூன் முதுகு, அசட்டுச் சிரிப்பு! இவற்றுடன் செக்கு மாதிரி குறுக்கே வளர்ந்துவந்தாள் மல்லிகா. அவளுக்கு லீலா ஆங்கிலமே பயில்வித்தாள்; தமிழ் தெரியாது. அவளைச் சிவம் தன் பெண்ணுகவே நினைக்கவில்லை. பணக்கார வீடென்று பெண் கேட்க வந்தவர்கள் பெண்ணைப் பார்த்ததுமே, "இதேதடா கோட்டான்" என்று ஓட்டம் பிடித்தனர். "இவர்கள் என் பெண்ணின் கால் தூசி விலை பெறமாட்டார்கள். அவளுக்கு இராஜா மாதிரி அகமுடையானை வைத்திருக்கிறேன்" என்று லீலா சென்னையிலிருந்து தனக்கு முன்பே அறிமுகமான ஒரு வாலிபனை வரவழைத்தாள்; அவன் பெயர் ஜீவகன்.

ஜீவகன் பி. ஏ., தேறி வேலையில்லாப் பட்டாளத்தில் தலைமை வகிப்பவன்; ஆள் நல்ல அழகன்; சரியான தேகப்பயிற்சி செய்து உடல் கட்டுமஸ்தானவன்; வசீகரமானவன்; லீலாவின் தோழிமகன். சேனு

புரியில் அவனுக்குப் பள்ளிக்கூட உபாத்தியாயர் வேலை கிடைத்தது. மறு வருஷமே எல். டி.க்குச் சென்று உபாத்திமைப் பரீட்சையில் முதன்மை பெற்று உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் ஊன்றிக்கொண்டான். அவனுக்குத் தேசாபிமானமும் அதிகம். அவன் நல்ல மாணவரைக்கொண்டு சாரணப்படை அமைத்து, ஊருக்குப் பொதுநலத் தொண்டு செய்தான். லீலா அவனை மாப்பிள்ளை என்றே நம்பி, மிக்க உபசாரம் செய்து வந்தாள். சிவத்திற்கும் அவனைப் பிடித்திருந்தது.

ஒரு நாள் ஜீவகன் தன் சாரணப் படைகளுடன் ஒரு கிராமத்திற்கு உல்லாச யாத்திரை போனுன். அது காட்டு வழியில் இருந்தது. காட்டில் சாரணர் கொஞ்சநேரம் ஒளிந்து விளையாடினர். திடீரென்று அபாய ஊதொலி பலமாகக் கேட்டது. எல்லாரும் ஓடினுர்கள். ஒரு மரத்தடியில் ஒரு பெண் மயங்கிக் கிடந்தாள். பார்த்தான் ஜீவகன்; அங்கேயே முக்கோணக் கூடாரம் கட்டி, அடுப்பு மூட்டிக் கஞ்சி வைத்து, மெல்ல வாயில் சொட்டுச் சொட்டாக ஊற்றினுன். பெண் நாக்கினுல் துழாவிக் கஞ்சியை உண்டு கண்விழித் தெழுந்தாள். பசிமயக்கத்தாலேதான் அவள் மயங்கிக் கிடந்தாள். அவளால் நடக்க முடியவில்லை. ஜீவகன் மூங்கிற் கழிகளாலும் துணிகளாலும் டோலி கட்டி அவளைச் சேனுபுரியில் சிவத்தின் வீட்டிற்குத் தூக்கிச் சென்ருன். பார்த்தார் சிவம். தன் கௌரியின் நினைப்புப் பளிச்சென வந்தது. பெண்ணை ஒரு மெத்தையில் சௌகரியமாகப் படுக்கவைத்து, வேண்டிய சிகிச்சை செய்து உடம்பைத் தேற்றினுர். பெண் நன்றி கூறி, "தாங்களே என் அப்பா" என்று உபசாரத்திற்குச் சொன்னுள்; அஃது உண்மையானது.

சிவம் அவளை ஆவலாக்க் கேள்வி கேட்டு, வரலாறு அறிந்தார்.

அவள் சொன்ன தற்சரிதமாவது :—"ஐயா, நான் ஓர் அநாதை; பெயர் சுதர்சனு; பெற்ருேர் விபரம் தெரியாது. இரண்டு வயதில் என்னை யாரோ தூக்கிச் சென்று ஒரு வேசை விடுதியில் விற்ருர்களாம். ஐந்து வயதிற்குப் பிறகே எனக்கு விவரம் தெரிந்தது. என்னைப் பகட்டாக அலங்கரித்து, வேசைத் தொழிலுக்குப் பழக்கினுர்கள். எனக்கு அத்தொழில் பிடிக்கவில்லை. ஏழு வயதில் அந்த விடுதிக்கு வந்த ஒரு மாமாவைக் கெஞ்சி அவருடன் ஓடிப்போனேன். அந்த மாமா என்னை ஓர் அநாதை ஆசிரமத்தில் சேர்த்துக் கல்வி புகட்டினுர். அந்த ஆசிரமத்திற்கு ஒரு தரம் மகாத்மா காந்தி வந்தார். நான் அவர் காலைப் பிடித்துக்கொண்டு, "என்னைக் காப்பாற்ற வேண்டும்; தேச சேவைக்கு என்னை அங்கீகரிக்க வேண்டும்" என்று இந்தியில் பேசினேன். என் சுறுசுறுப்பைக் கண்டு அவர் ஒரு சர்க்கா தந்து, "இதைச் சுற்றுவதே தேசசேவை; இதுதான் சுதர்சனம்; உன் பெயரும் சுதர்சனு ஆகுக; நீயும் நூற்றுவா; பிறரையும் நூற்கச் சொல்!" என்ருர்.

மகாத்மா தந்த கையடக்கமான சர்க்காதான் இது. நான், என் படிப்பு முடிந்ததும் ஊர் ஊராகச் சென்று இராட்டினக் கலையைப் பரப்பினேன். சென்னையில் நடந்த அகில இந்திய காங்கிரசில் நான் நூல் போட்டியில் முதல் தரமாக நின்றேன். நான் அப்போது நூற்ற நூலால் ஓர் அழகான மாலை செய்து மகாத்மா காந்திக்குச் சூட்டினேன். காங்கிரஸிற்கு ஜவஹர்லாலும், அவர் பெண் இந்திராவும், மனைவி

கமலாவும் வந்திருந்தனர். நான் இந்திராவுக்குத் தோழியாய்விட்டேன். ஜவஹர் என்னை அன்புடன் நேசித்தார். இந்திரா பிடிவாதமாக என்னையும் அலகாபாத்திற்கு வரவேண்டுமென்றாள். நான் அவ்வாறே நேரு குடும்பத்துடன் சென்று, கொஞ்ச காலம் இருந்தேன். ஜவஹரும் மனைவியும் சிறைசென்றனர். இந்திரா சீமைக்குப் படிக்கச் சென்றாள். நானும் சர்க்காவைத் தூக்கிக்கொண்டு கதர்ப் பிரசாரத்திற்குக் கிளம்பினேன். தினம் ஆறு மணி நேரம் கணக்காக நூற்றேன்; நூற்கும்போதே சமுதாய முன்னேற்றத்திற்குரிய கீதங்களைப் பாடினேன். என் பாட்டிற்கு இராட்டின ஓங்காரமும் இல்லை; நூல் வாங்குவோரும் இல்லை. ஆதலால் பசியால் சோர்ந்து நடைதளர்ந்து பாதையில் விழுந்து மயங்கினேன். தாங்கள் என்னைக் காத்தீர்கள். பகவான் தங்களுக்கு நலமருளுக! நீங்களெல்லாம் இன்று முதல் கதரே உடுத்தவேண்டும். அதுவே என் வேண்டுகோள்" என்று கதையை முடித்தாள் சுதர்சனை.

"ஆகா! இதோ இன்றே எல்லோரும் கதர் அணிகிறோம். சுதர்சனை, இனி, நீ இங்கேயே இருக்க வேண்டும். என் பெண்மாதிரி உன்னைப் பேணுவேன். உன் இராட்டினப் பிரசாரத்தை இந்த ஊரில் நடத்தலாம். என் வீட்டிலேயே இரு!" என்றார் சிவம். சிவத்தின் அன்பும், ஜீவகன் கருணையும் அவளை வசிகரித்தன. சாம்பசிவத்திற்குச் சுதர்சனைமேல் தன்னை அறியாமல் பாசம் அதிகரித்தது; கௌரி யென்றே அவளைப் பாவித்துச் சீராட்டினார். சுதர்சனை தினம் நூல் நூற்று இரண்டணாச் சம்பாதித்துக் கொடுத்தாள். "தங்கமே, நீ சம்பாதிக்கத் தேவையில்லை.

எனக்கு ஏராளமான சொத்திருக்கிறதே" என்றூர் சிவம்.

"அப்பா, அவரவர் உணவுக்கு அவரவர் உழைக்க வேண்டும் என்று நான் உபதேசித்து வருகிறேன். முதலில் என்னளவிற்கு உழைத்துச் சம்பாதிக்கா விட்டால், என் சொல்லுக்கு மதிப்பு இராது. ஆதலால் என் கை சுதந்தரமாக இராட்டினம் சுற்ற விடுங்கள் !" என்றுள் சுதர்சனு. சிவம் அவள் விருப்பத்தைத் தடை செய்யவில்லை.

ஜீவகனும் சுதர்சனுவைப்போலவே சர்க்கா நூற்கத் தொடங்கினுன். இருவரும் ஓய்வு நாட்களில் மணிக்கணக்காக நூற்பதுண்டு. இருவர் மனமும் ஒன்றுதான். நாளடைவில் இருவருக்கும் கருத்து ஒன்ருகி, ஒருவரை யொருவர் உள்ளுற நேசித்தனர். இவன் உயிர், அவள் உடல்; இவன் அறிவு, அவள் அன்பு; இவன் உள்ளம், அவள் உணர்ச்சி. இவனின்றி அவளுக்கு வாழ்வில்லை. அவளின்றி இவனுக்கு இன்பமில்லை. இவ்வாறு இயல்பாகவே காதலித்து, இருவரும் மணம்புரிந்து கொள்வதென்றும் தீர்மானித்தனர்.

இந்த இருவரும் ஒன்ருக நூற்பதும் பேசுவதும் லீலாவின் பொருமைத் தீயைக் கிளப்பின. தான் மல்லிகைக்கென்று கொண்டுவந்து வளர்த்த மாப்பிள்ளை தனக்குப் பிடிக்காத வேருெரு பெண்ணைக் காதலித்தால் அவள் எப்படிப் பொறுப்பாள்? தவிர ஜீவகன் மல்லிகையை வெறுத்தான். அவள் கிட்ட வரும்போதே அவன் மூக்கைப் பிடித்துக்கொண்டு, முகத்தைத் திருப்பிக்கொண்டு, நல்ல காற்று வாங்க ஓடினுன். லீலா தன் நடையிலேயே பெண்ணையும்

பழக்கிவிட்டாள். ஆங்கிலம் தடபுடலாக வரும். வண்ணுன் வெளுத்த ஆடை ஆடம்பரங்கள் பிரமாதமாயிருக்கும். முகச்சாயக் கடைக்கும் அவளால் கொழுத்த வரும்படிதான்! ஆனுல், காலை ஏழுமணிக்கு எழுந்து பசையில் பல் தேய்த்துச் சோப்புப் போட்டு முகங் கழுவுவதுடன் சரி. தலை உடம்பு குளிர முழுகுவதில்லை; கண்டபடி சாப்பிட்டுச் சரியாகக்கூட வாயைக் கொப்புளிப்பதில்லை. அதனுல் உடம்பு குப் என்று ஒரு பர்லாங் நாறும். அதனுடன் நமது நாட்டுக் குரிய ஆசார அனுஷ்டானங்களையெல்லாம் மூடக் கச்சந்தியென்று இருவரும் கேலிசெய்வது சிவனுக்கே பிடிக்கவில்லை. இருவருக்கும் ஏதாவது வேண்டுமானுல், முரண்டு செய்து பெற்றுக்கொள்வர். மல்லிகா திருமேனிக்கு வகைவகையான நகைகளும், மாலைகளும் வாங்கி, தினம் ஓர் அலங்காரம் செய்து, "என் கிளி எவ்வளவு அழகாயிருக்கிறது!" என்று கட்டி முத்தமிடுவாள் லீலா. 'உன் கிளியை அண்டங்காக்காய்தான் மெச்சவேண்டும்' என்று மனதில் சொல்லிக் கொள்வான் ஜீவகன். சுதர்சனுவை அவன் சக்தி தெய்வமாக வணங்கினுன்.

லீலாவின் சினத்தீ முழுதும் கடுவேகத்துடன் சுதர்சனுமேல் பாய்ந்தது. இவள் ஜீவகனைப் பார்க்கவே முடியாமல் செய்தால்தான் தன் காரியம் பலிக்கும் என்று முடிவு செய்தாள். ஒருநாள் ஜீவகன் உல்லாசயாத்திரை சென்றிருந்தான். சிவனும் வெளியூருக்குச் சென்றிருந்தார். சுதர்சனு கூடத்தில் பக்தி கானங்கள் பாடி நூற்றுக் கொண்டிருந்தாள். மல்லிகா, "இதென்ன மூடப்பாட்டடீ? ஒண்ணும் பசலி இராட்டினப் பைத்தியம் உனக்கேனடீ? யந்திரத்தில் அருவி

போல் ஆடை நெய்து தள்ளும் இந்நாளில் கையாலே நூற்பதாம், நெய்வதாம், சாக்கை உடுத்துவதாம்!" என்று இழித்து நகைத்தாள்.

சுதர்சனு, "மல்லிகா, நீ செல்லக் குழந்தை; உனக்கு ஏழைகள் படும் பாடு தெரியாது. நம் நாட்டில் கோடிக் கணக்கான ஏழைகள் ஒருவேளைச் சாப்பாட்டிற்கும் இல்லாமல் திண்டாடுகிருர்கள். நாடெங்கும் பஞ்சம்; ஆளுக்கு இரண்டணுக் கிடைப்பது கூடக் கடினமாயிருக்கிறது. இந்த இராட்டினம் ஏழைகளுக்குத் தினம் மூன்று, நான்கு அணுக்கள் தந்து மானங்காக்கும்; அரை வயிற்றுக் கஞ்சியாவது வார்க்கும். இஃது ஏழைகளின் காமதேனு. அம்மா, நீயும் நூற்றுப்பழகினுல், அதன் பயனை அறிவாய். கதர்ப் புடவை, சாக்கு, கனம் என்கிருயா? உன் மேனியில் ஏறியிருக்கும் நகைகள் கனமில்லையா? உன் வயிற்றில் குழந்தை வந்தால் கனமில்லையா? மானங்காக்கும் ஆடை கனம் என்னலாமா? நீ உடம்பில் சுமத்திக் கொண்டிருக்கும் சரக்குகளையும், ஒரு கதர்ப்புடவை இரவிக்கையையும் தராசில்வைத்துப் பார்! கதர் கனமாயிராது. மல்லிகா, நீயும் காலத்தை வீணுக்காமல் நூற்றுவா; கதர் அணி!" என்று சாந்தமாகவே சொன்னுள்.

"உன்னைப்போல நான் அஷ்டதரித்திரமில்லையடீ...எனக்கு விதவிதமான பட்டும் நகையும் உண்டு" என்று மல்லிகா பெருமை பேசும்போதே, புலிபோலத் தாவி வந்தாள் லீலா. அவள் வாய் **வெசூவியஸ்** எரிமலைபோலத் தீமொழி கக்கியது.

லீலா: நேற்று வந்த தரித்திரம்...அநாதையென்று இடங்கொடுத்தேன்...என் பெண்ணை என்

னெல்லாம் சொல்லுகிறுய்......ஹூம்......ஏண்டி, என் குடியைக் கெடுக்கவா வந்தாய்?......நீலி, என் மாப்பிள்ளை ஜீவகனை வலைபோடுகிறுய். பெண்ணு இலட்சணமாயில்லாமல், அடக்கமில்லாமல், எப்போதும் இராட்டை சுற்றுவதும், பாடுவதும், படிப்பதும் ஊருக்கு உபதேசம் செய்வதுமாயிருக்கிறுய். இதற்குத்தான உனக்குத் தண்டச்சோறு போடுகிறேன்? ......நாயே, மூன்று வேளையும் கொட்டிக் கொள்ளுகிறுயே?......போ, வேலை செய்......கழுதை! இனி இந்த இராட்டினத்தைத் தொடக்கூடாது! நீ என் சோற்றைச் சாப்பிடுகிறுய். என் வேலைக்காரி......போ, கொல்லையில் பற்று விளக்கு; முற்றம் கூட்டு; இறை தண்ணீர்; மெழுகு வீட்டை; இடி மா; தீட்டு அரிசி; சமையலறையைத் தாண்டி நீ ரேழியில் கால்வைத்தால், அப்படியே காலை வெட்டிவிடுவேன்; கவனம். புகலற்ற நாயே! என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளவா வந்துசேர்ந்தாய்? வீதியிலே போன சனியனை இந்த ஜீவகன் வீட்டிற்குக் கொண்டு வந்தான். இவரும் அதற்கு இடங் கொடுத்துவிட்டார்! கொழுப் பேறிவிட்டது; இதோ உன் கொழுப்பை இறக்குகிறேன் பார்! போ, கொல்லைக் கொட்டிலுக்கு!

சுதர்சன: அம்மா, ஏன் ஏழைமேல் இந்தக் கோபம்? நிதானமாகப் பேசுங்கள்! நான் நூற்றுத் தினம் இரண்டணு சம்பாதித்துத்தானே உண்கிறேன்? அப்பாவும் அவரும் என் நடத்தையை ஒப்புகிறுர்களே!

லீலா: அப்பாவா? தடிக்கழுதை!......அவரா உன் அப்பா? எதிர்த்துப் பேசாதே! நூற்பதா?

இதோ உன் இராட்டினம் வெந்நீர் அடுப்புக்குப் போகிறது, பார்!

லீலா, சுதர்சனுவைப் பிடர்பிடித்துத் தள்ளி உள்ளே கொண்டுசென்று அடிமைமாதிரி வேலைவாங்கினுள். 'இப்படித்தானே நமது தேசநிலையும் இருக்கிறது' என்று சுதர்சனு கண்ணீர் விட்டுக்கொண்டே பகவானை மனமார வணங்கி விடுதலை வேண்டினுள்.

அவள் ஜீவகனைப் பார்க்கமுடியாமல் கொல்லைப் பக்கமே சிறையிட்டாள் லீலா. தன் மல்லிகையை நிரம்பச் சாயமடித்து, அலங்கரித்துக் காப்பி அனுப்புவது, கேரம் விளையாடச் சொல்வது - இப்படியாக ஜீவகன் மனத்தை வசப்படுத்தப் பார்த்தாள். ஜீவகன் அவளுடன் பேசவில்லை; அவள் தந்த பண்டங்களையும் உண்ணவில்லை. "சுதர்சனுவை வரச்சொல்!" என்றே அடிக்கடி சொன்னுன்.

லீலாவும் மல்லிகையும் ஒருநாள் உலாவப் போயிருந்தார்கள். அச்சமயம் சிவம் சுதர்சனுவுடன் கூடத்தில் பேசிக்கொண்டிருந்தார்; சுதர்சனு படும் துயரத்தைக் கேட்டு மனமுருகினுர். அப்போது ஓர் ஆண்டி, வீட்டிற்குள் நுழைந்தான். சிவம் அவனுக்குக் கால் ரூபா தந்தார்; "ஐயா, நான் பிச்சைக்காக வரவில்லை; உங்களுக்கு ஓர் உண்மை சொல்லவே வந்தேன்" என்று ஆண்டி சுதர்சனுவைச் சுட்டிக் காட்டினுன். சிவம் ஆவலாகக் கேட்டார். ஆண்டி கண்கலங்கச் சொன்னுன் :

"ஐயா, நான் சென்னையில் லீலாவின் வலையில் விழுந்த ஒரு பாவி; என் பெயர் கோதண்டம். நான் ஒரு படித்த மடையன்; பெண்பித்தன். லீலாவிடம் பலமாக வசப்பட்டிருந்த என்னை, அவள் ஒரு கொடிய

காரியம் செய்ய ஏவினுள். நீங்களெல்லோரும் சென்னைக்கு வந்திருந்தீர்கள்; சுமார் பதின்மூன்ருண்டுகளுக்கு முன் லீலா தங்கள் இரண்டு வயதுக் குழந்தை கௌரியை என்னிடம் தந்து, "எங்காவது கொண்டுபோய்க் கொன்றுவிடு; இன்றேல் விற்றுவிடு!" என்ருள். நான் என் தாசி செங்கமலத்திற்கு அவளைத் தந்தேன். ஏழாம் ஆண்டில் இப்பெண் எங்கோ ஓடிப்போனுள்; பிறகு மகாத்மா, ஜவஹர்லால் போன்ற மகான்களின் பிரியத்தைப் பெற்று ஊர் ஊராக இராட்டினப் பிரசாரமே செய்து சுற்றியதாக அறிந்தேன்; எப்படியாவது இந்தப் பெண்ணை மீண்டும் தங்களிடமே சேர்ப்பதென்று முயன்றேன்; இருக்கும் இடத்தைத் தேடினேன். எனது தீய வாழ்வை நொந்து திருப்பதி வேங்கட முனிவரிடம் உபதேசம் பெற்றுக் காஷாயம் அணிந்தேன். எனக்கு ஏராளமான செல்வம் உண்டு. எல்லாம் இந்தியன் பாங்கில் போட்டிருக்கிறேன். நான் மனைவிமக்களையெல்லாம் இழந்தேன். இந்தப் பெண்ணிற்கே என் சொத்தை எழுதிவைத்தால் என் பாபத்திற்கு மன்னிப்பாகும். நான் தேடிய கௌரி இதோ இந்தப் பெண்ணே! அதிருஷ்டவசமாகத் தங்கள் பெண் தங்களிடமே வந்தாள்!"

சிவம் இன்பக் கண்ணீருகுத்து, "ஆ, என் உமா கௌரி!...உன்னைக் கண்டதுமே நினைத்தேன்...என் இன்பத்திற்கு எல்லையில்லை!...என் அருமை மகளே!" என்று தழுவி முத்தமிட்டார். ஆண்டி தன் பாங்குப் பணத்தை அவள் பேருக்கு எழுதிக்கொடுத்து மறைந்தான். அவன் அப்பணத்தைக் கொண்டு ஏழைகளுக்கு

உழைப்பும் பிழைப்பும் உண்டாகும்படி தொழில் நடத்தச் சொன்னான்.

ஜீவகனும் இச்சம்பவத்தைக் கேட்டு மகிழ்ந்தான். இருவரும் பாங்குச் செக்கை மாற்றச் சென்றனர்.

லீலாவுக்கு ஜாடையாக விஷயம் தெரிந்ததும் பகீர் என்றது. சுதர்சனாவை உடனே உள்ளே அழைச்துச் சென்று ஓர் அறையில் அடைத்து, "பேசாமல் படுத்துக் கொள்; உனக்குக் காய்ச்சல்; வைத்தியரை அழைத்து வருகிறேன்" என்றாள்; "ஐயோ! நான் நன்றாகத்தானே இருக்கிறேன்" என்று சுதர்சனா அலறினாள். "கப்சிப்! பேசாதே! கழுத்தைத் திருகி விடுவேன்" என்று லீலா பேய்வடிவங்கொண்டு மிரட்டினாள்.

சிவனும் ஜீவகனும் சேனாபுரியிலேயே கதர்ப்பணி தொடங்க ஏற்பாடு செய்திருந்தனர். சுதர்சனாவையும் அழைத்தார்கள். அதற்கு லீலா, மறுத்து "அவளுக்கு ஜன்னி, உள்ளே படுத்துப் புலம்புகிறாள்! நல்ல மருந்து கொடுத்துப் படுக்கவைத்திருக்கிறேன்." என்று உத்தரவு போட்டாள்; தனக்கு இதமான ஒரு வைத்தியனைக் கொண்டு பணத்தை வீசி ஏதோ மருந்துகொடுக்க வஞ்சம் புரிந்தாள். அந்தக் கார்க்கோடகி இருக்குமட்டும், சுதர்சனாவை ஜீவகன் காணவே முடியாது; காணாமலும் இருக்கமுடியாது.

வந்தது பசுவன் திருநாள். ஜோத்திரை அந்தத் தெருவில் அமளியாக நடந்தது. லீலா, மல்லிகையை ஜரிகையும் பொன்னுமாக அலங்கரித்துக் கட்டுச் சாதம் கட்டிக்கொண்டு பசுவன் ஊர்வலத்துடன் சென்று குளத்தங்கரையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். இச்சமயம் விருட்டென்று ஜீவ

கன் உள்ளே புகுந்தான். "சுதர்சன" என்று கூப்பிட்டான். "இதோ சிறைப்பட்டிருக்கிறேன்; பூட்டை உடைத்து என்னை விடுதலை செய்யுங்கள்!" என்று அலறினாள் சுதர்சன. ஜீவகன் ஆத்திரத்துடன் பூட்டை உடைத்தான். சுதர்சன சோர்ந்து மெலிந்து படுக்கையில் ஒட்டிக்கொண்டிருந்தாள்.

"கண்ணே, உடம்பென்ன?" என்று ஆவலாக வினவினான் ஜீவகன்.

"எனக்கு உடம்பு நன்ருகவேயிருக்கிறது. காய்ச்சல் என்று பெயர்பண்ணி லீலா என்னை இங்கே அடைத்து, வைத்தியரைக்கொண்டு விஷ மருந்து தந்தாள். அதை நான் சாப்பிடாமல் கொட்டிவிட்டேன். பிறகு பட்டினி போட்டாள்......கதை வளர்ப்பானேன். இந்த வீட்டை விட்டு உடனே செல்வோம்......வேறு பேச்சு ஊரைத் தாண்டி" என்ருள் சுதர்சன. ஜீவகன் அவளை அப்படியே தூக்கிகொண்டு கொல்லைக்கதவைத் திறந்து வெளியேற்றி ஒரு வண்டியில் வைத்து ஸ்டேஷனுக்கு விரைந்து இரயிலேறினான். இருவரும் ஒரு கிராமத்தில் இறங்கினார்கள்.

லீலாவும் மல்லிகையும் ஜோத்திரை பார்த்து வந்ததும் குறட்டை வாங்கினர். காலையிலும் நீண்ட நேரம் உறங்கி யெழுந்து காப்பி சாப்பிட்ட பிறகு, "அடி தரித்திரமே, பசிக்கிறதா? பழையது கொஞ்சம் போடுகிறேன்" என்று லீலா, அறைக்கு வெளியிலிருந்து மெல்லக் கதவைத் தட்டினாள்; பதிலில்லை. 'உன்னைக் கழிச்சல் கொண்டு போனதா? வாயைத் திறந்து கேளேன்! இன்றேல், சோறு மண்!" என்ருள்; பதிலில்லை. "உன்னைக் காய்ச்சல் வாரிக் கொண்டுபோனதா?...சொல்லேன் பதில்...பசிக்கிற

தாடீ?" பதிலில்லை. "அவ்வளவு பிடிவாதமானல் பட்டினி கிடந்து செத்துப்போ! எனக்கென்ன? ஒரு கட்டு விறகும் ஒரு புட்டி மண்ணெண்ணெயுமே செலவு. உன்னை ஸ்மசானத்தில் வைத்து எரித்து உன் சாம்பலைப் போட்டு, என் மல்லிகைக்கு முல்லை வளர்க்கிறேன்" என்று அலறினுள். பேச்சில்லை.

'அடீ, உனக்கு அவ்வளவு திமிரா? உன்னை எற்றி மிதிக்கிறேன் பார்" என்று பூட்டில் சாவியைக் கோக்கத் தொட்டாள். பூட்டு திறந்திருந்தது; உடைந்திருந்தது; திடுக்கிட்டாள்! மளமளவென்று கதவைத் திறந்தாள். "அடி தரித்திரம், நான் கேட்கிறேன்; ஊமைக்கோட்டான் மாதிரி இருக்கிருயா?" என்று காலால் ஓங்கி மிதித்தாள். பதிலில்லை. கால் மெத்தென்றது. போர்வையைத் திறந்து பார்த்தாள். தலையணை! "ஐயையோ, ஓடிப்போனுளே!" என்று கூச்சலிட்டாள். சிவம் ஓடிவந்தார். தன் கௌரி, எங்கோ காணவில்லை. ஜீவகனையும் காணவில்லை; பரபரப்புடன் தேடினர். "இந்தப் பேய் அவனை எங்கோ கூட்டிக்கொண்டு போய்விட்டாள்" என்று லீலா சத்தமிட்டாள்.

"சட், வாயைத் திறக்காதே, இராட்சஸி! எல்லாம் உன்னுல் வந்தது. இனி, நான் இந்த வீட்டில் இருக்கமுடியாது; உன் அக்கிரமங்களை இனிப் பொறுக்க முடியாது. உனக்கு ஜீவனும்சம் மாதம் இருபது ரூபா தொலைத்துக்கொண்டு, பேசாமல் வந்த வழியே போ! இன்றேல் நான் போகிறேன். நீ சுகமாயிரு!"என்று சினந்தார் சிவம்.

"இஃதென்ன இது? எதற்கெடுத்தாலும் என்னையே கறிப்பது. உங்களைக் கட்டிக்கொண்டு நான்

பட்டதெல்லாம் போதாதா?" என்று குறுகுறுத்தாள் லீலா. சிவம் பதில் பேசவில்லை. அவருக்கு உலகமே புளித்தது. சுதர்சனு வழியை அவரும் பின்பற்றி விட்டார். தன் ரொக்கங்களை யெல்லாம் இந்தியன் பாங்கியில் போட்டார்; நில புலன்களைச் சரியானபடி குத்தகை பேசி முடித்தார். லீலா, மல்லிகா இருவரும் எளிய வாழ்வு வாழும்படியான தொகையை மாதாமாதம் அவர்களுக்குக் கொடுக்கும்படி நண்பரொருவர்மூலம் ஏற்பாடு செய்தார்; ஒரு நாள் ஏதோ அவசரமாகப் போவதாகக் கிளம்பினுர்; திரும்பி வரவில்லை. லீலா வாய்க்கு வந்தபடி வைது தீர்த்துப் பிறகு கொட்டமடங்கி, மாதம் இருபது ரூபாயில் செட்டாகக் காலட்சேபம் செய்யத் தொடங்கினுள். மல்லிகாவின் முகத்திலும் சாயம் இறங்கியது. இருவரும் நாளடைவில் தாம் செய்த குற்றங்களை உணர்ந்து திருந்தினர்.

சிவம் எங்கே? அவர், அந்த ஆண்டியைத் தேடிப் பிடித்தார்; அவன் அடைந்த குருவையே அடைந்தார்; உண்மையறிவைச் சாதனம் செய்தார். அதனுல் மனம் அடங்கியது. உள்ளமைதி அடைந்ததும் சிவம் உலகிற்குத் தொண்டுசெய்யத் தொடங்கினுர்; கீதையும் குறளும் கொண்டு ஊர்ஊராகச் சன்மார்க்கப் பிரசாரஞ் செய்து வந்தார். இப்போது சிவம் புதுக்கோட்டையில் சன்மார்க்க உபதேசங்கள் செய்தார். ஜனங்கள் அவர் பிரசங்கங்களைப் பெருந்திரளாக வந்து கேட்டனர். பிரசங்கத்திற்குப் பிறகு சிவத்திற்கு, "**சன்மார்க்க சாதனம்**" என்ற ஒரு நூலை அன்பரொருவர் தந்தார். அதை இரவே ஆவலாகப் படித்தார் சிவம். அந்நூல் தேவர்மலை சுத்தா

சிரமத்திலிருந்து வெளிவந்த பல நூல்களுள் ஒன்று. அதை எழுதிய ஜீவரட்சணரைக் காணச் சிவம் ஆவல் கொண்டார்.

மறுநாளே, வண்டியில் அன்பர் சிவத்தைச் சுத்தாசிரமத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆசிரமம் வண்டுபோல் சுறுசுறுப்பாயிருந்தது. பாட்டும் பணியும் அதன் நாடிகளை இயக்கின. நூற்றல், நெய்தல், பாய்பின்னல், சட்டிபானை செய்தல், காகிதத்தொழில், அச்சகம், புத்தகாலயம், மின்சாரத்தொழில், பாற்பண்ணை, விவசாயம் முதலிய எத்தனையோ தொழில்கள் அங்கே அமைதியாக நடந்தன. தொண்டர் முகத்தில் அருளொளி வீசியது. அந்த நிலயத்தை அவ்வளவு அழகாக நடத்தும் பெரியாரைக் காண ஆவலாகச் சென்றார் சிவம். சிவம் வரக்கண்டதும், "அப்பா" என்றொரு குரல் கேட்டது. கௌரிதான் எதிரே நின்றாள். "மாமா" என்றோர் இன்பக் குரல் துள்ளி வந்தது. ஜீவகன் எதிரே நின்றான். "என் கண்ணே, கௌரி, சௌக்கியமா யிருக்கிறாயா? ஜீவகா, உன்னைக் கண்டு மகிழ்ந்தேன். இஃது உங்கள் கைங்கரியமா? சந்தோஷம்...இனி என் யாத்திரையும் முடிந்தது" என்றார் சிவம். "தாங்கள் இனி இங்கேயே இருக்கலாம்" என்று இருவரும் உபசரித்துச் சொன்னார்கள். "அதுதான் என் இச்சை" என்று சிவம் தன் தோள் பையிலிருந்த பாங்குச் செக் புஸ்தகத்தை எடுத்தார். தாம் இந்தியன் பாங்கில் போட்டிருந்த இரண்டு லட்ச ரூபாயையும் சுத்தாசிரம கைங்கரியத்திற்கு நிவேதித்தார்.

துன்பப்பிரிவு இன்பவாழ்வாக முடிந்தது! அன்று ஜீவகனும் சுதர்சனுவும் இரயிலேறித் தேவகோட்

டைக்குத்தான் வந்திறங்கினர். தேவகோட்டையில் ஜீவகனுடன் படித்த நல்ல நண்பர் ஒருவர் பள்ளிக் கூடம் நடத்தினர். அங்கேயே ஜீவகன் ஓர் அலுவல் பெற்ருன். சுதர்சனு பெண் பள்ளிக்கூடத்தில் ஹிந்தி யும் நூற்றலும் ஆடல் பாடலும் சொல்லிக்கொடுத் தாள். இருவரும் சிக்கனமாக வாழ்ந்து நான்காண்டு களில் ஐயாயிரம் ரூபா சேர்த்தனர்; தேவர்மலைச் சாரலில் மலிவாக நிலம் தர்க்காஸ்து வாங்கினர்; நிலத்தைப் பண்படுத்தி விவசாயஞ் செய்து கனித் தோட்டம் போட்டனர். நிலம் நேர்த்தியானதும், அங்கே ஒரு சிறு மனை கட்டிக் குடியேறி, சுற்றிலு முள்ள கிராமங்களில் கல்வியும் கைத்தொழிலும் சன் மார்க்க சாதனமும் பரப்பினர்; நாளடைவில் தேவர் மலை ஒரு சுத்தாசிரமமாக வளர்ந்தது. பரிசுத்தமே அங்கே சமய சாதனம். சாதிமத வேறுபாடில்லாமல் எல்லாரும் பொது நலமான தொழில்செய்து, கல்வி வளர்த்து உடலுறுதியும் மனவுறுதியும் கடவுளன்பும் கொண்டு வாழும் வகையை ஜீவகன் காட்டினன். அவனுக்குச் சக்தியாயிருந்தாள் கௌரி சுதர்சனு. இங்கே, எல்லாம் சுபமாக முடிந்தது!

அங்கே, லீலா மகளைக் கூட்டிக்கொண்டு சென்னை சென்ருள்; பிறகு அவள் விவரம் தெரியவேயில்லை. ஏதோ பேசும் படத்தில் நடிப்பதாகக் கேள்வி. நிச் சயமாகத் தெரியவில்லை.

நல்லது, அந்த மட்டில் மகிழ்வோம்!

4. கடிகாரச் சங்கிலி

சென்னையின் நாகரிகப் பண்ணை திலகர் கட்டடம். ஐந்தரை மணியானால் சென்னை நாகரிகமே அங்கே முகாம் போடுகிறது. உப்பங் காற்று ஜிலீர் என்று அடிக்கிறது. ரேடியோப் பாட்டு வந்து காதைக் கொஞ்சுகிறது. நண்பர் கூட்டம் கூட்டமாக அரட்டை யடிக்கின்றனர். நவநாகரிகத்தில் எத்தனை அலங்காரங்களும், அலங்கோலங்களும் உண்டோ அத்தனையும் அங்கே பவனி வருகின்றன. புதிய நடையுடை பாவனைகள் அங்கே அரங்கேறுகின்றன. அதோ அன்னமும் மயிலும்போலக் கல்லூரி மாணவிகள் வருகின்றனர். இளங் காளைகள் படிப்பது போலும் பார்ப்பதுபோலும் அங்குமிங்கும் வட்டமிடுகிறார்கள்.

இந்தக் காட்சியில் சீனு மனம் பற்றவில்லை. சீனு வேடிக்கைப் பேர்வழி; நாலு பேருடன் கலகலப்பாயிருப்பவன். சதா 'தனனனனனா' என்று ஏதாவது இராகத்தை இழுத்துக்கொண்டு தன்னைப் புஷ்பவனத்தின் அவதாரமாக நினைப்பவன்; சங்கீதம் என்றால் அவனுக்கு உயிர். 'கலையே வாழ்வு, வாழ்வே கலை' என்பது அவன் கொள்கை. அவன் முகத்தில் கலாதேவி பொலிவாள்!

இன்று சீனு முகத்தில் ஈ ஆடவில்லை. மனத்தின் கலக்கம் முகத்தில் கொந்தளிக்கிறது. எதிரே அலை கடல் துமி தெறித்து அலாரிப்புத் தொடங்குகிறது. சிறு பிள்ளைகள் பலீன் சடுகுடு ஆடுவதுபோல் திரைகள் விளையாடுகின்றன. அந்திவானத்தின் இரத்தச்

சிவப்பில் மெள்ள இருள் படருகிறது. கவிதை யுள்ளம் படைத்த சீனு இயற்கையின் கோலாகலத்தைக் கூட அசட்டை செய்து ஏதோ சிந்திக்கிறான்; பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுக்கிறான். 'இஹூம்' என்று கண்ட சுத்தி செய்துகொள்ளுகிறான். அவனையும் அறியாமல் ஒரு பாட்டுக் கிளம்புகிறது :

வேதனை செய்குதம்மா-இள
வேனிலும் என்னை வெதுப்பு தம்மா......!
காத லெனும் படகை-ஒரு
கவலைப் புயல் வந்து மோது தம்மா......!

அவ்வளவுதான். பாட்டு இடை முறிந்து போகிறது. தந்தி யறுந்த வைணிகன்போலக் கையை உதறிக் கொண்டு சிறிது உலாவுகிறான். இருள் நெருங்குகிறது. திலகர் கட்டம், ஆட்டமோய்ந்த அரங்கம்போல விரிச்சிடுகிறது. விளக்கணைப்பு நாள் வேறே! 'ஹூ' என்றொரு பெருமூச்சுடன் சீனு எழுந்தான்.

அப்போது அவன் கண்ணை யாரோ பொத்தியதை உணர்ந்தான். யார் ? அவளே......

சீனு : மதுரம், உன்னிடம் ஒரு வார்த்தை சொல்லிச் செல்ல மனம் துடித்தது.

மதுரம் : செல்வ தெங்கே ? என் மேல் பழி வாங்கவா இந்தப் பேச்சு ?

சீனு : இல்லை மதுரம், என் மேல் பழி வாங்கத்தான். நான் ஏன் உன்னைக் காதலித்தேன் ?

மதுரம் : வண்டு மலரைக் காதலிப்பது தவறு ? சூரியனைக் கண்டு தாமரை மலர்வது தவறு ? சந்திரனைக் கண்டு அல்லி மகிழ்வது பிசகா ?

சீனு : இயற்கையில் சரி. மனிதருக்கு அது தானே தெரிவதில்லை. காதலின் பாதையில் முள்வேலி

4

யடைத்திருக்கிறுர்கள். அந்த வேலியைத் தாண்டத் துணிந்தேன். அதன்முன் ஒரு பெரிய கவலை என்னைக் கலக்குகிறது.

மதுரம் : என்ன கவலை? என்னிடம் எதையும் ஒளிக்கக்கூடாது. தங்கள் உள்ளத்தை நான் துருவிப் பார்ப்பேன்.

சீனு : ஒளிப்ப தென்ன? இதோ கடிதம்! இது நாலாங் கடிதம். ஸ்ரீபெரும்புதூரில் என் தகப்பனுர் பெரிய குடும்பி. எனது படிப்பு பாதிச் சொத்தை விழுங்கியது; நிலம் அடமானமானது; இனிப் பணம் அனுப்ப முடியாதாம். எனது நடத்தை பிசகாம். நான் யாருடனே கூடிக்கொண்டு தத்தாரியாகத் திரிகிறேனும். யாரோ அவருடைய சிநேகிதர் ஒருவராம். அவர் பெண்ணை எனக்கு தீர்மானம் செய்திருக்கிறுராம். உடனே என் குற்றங்களுக்கு வருந்தித் திருந்தி அந்தப் பெண்ணை மணந்து ஒழுங்கா யிருப்பதானுல் சரி, இன்றேல் எனது முகத்தில் விழிக்க மாட்டாராம். கண்ணே! யாரோ குண்டுணிகள் கோள் சொல்லி யிருக்கிறுர்கள். மூன்று மாதமாகப் பணம் வரவில்லை. ஹாஸ்டல் செலவுக்கும், பரீட்சைக்குப் பணம் கட்டவும் வகையில்லை. அங்கு மிங்கும் வேலைக்குத் திண்டாடினேன்; கிடைக்கவில்லை. உன்னை யடையவும் வழியில்லை. நீ என்னை யடையவும் வழியில்லை. ஆதலால், எனது கவலையைக் கடலில் கரைத்து விடுகிறேன்; அல்லது, கண் காணுத இடத்திற்கு ஓடிப் போய் எப்படியாவது காலம் தள்ளுகிறேன்; அல்லது, நட்சத்திர உலகில் புகுந்து வெள்ளித் திரையில் மின்னுகிறேன். வேறு வழியில்லை.

மதுரம் : இதற்குத்தானு கவலை?

சீனு : மதுரம், கவலை எனது சவலைக் குழந்தை. அதை ஏகாந்தத்தில் முத்தமிட்டு விளையாடுவேன்! அஃது என்னைச் செல்லக் கிள்ளுக் கிள்ளும், குட்டும், அடிக்கும். பொறுத்துக்கொண்டு அதற்கு வாழ்வையே தீனியாகத் தருவேன். கவலைதான் எனது முன்னேற்றத்தைத் தூண்டும் சக்தி. 'சென்னையை விட்டுப் போ!' என்று அது தூண்டுகிறது. கண்ணே, நாழியாயிற்று; கல்லூரியில் தேடுவர். நீ செல்! இதுவே என் கடைசி முத்தம்...மதுரம்...!

மதுரம் : கண்ணாளா, இதோ கவலையை நான் பருகி விடுகிறேன். இனி இன்பம், இன்பம்! அச்சமில்லை! மனோதைரியத்தால் நமது காரியம் நிறைவேறும். முள் வேலிகளைக் காதல் தீயால் எரிப்போம். பணத்திற்காக வருந்த வேண்டா! உங்கள் நிலைமையைச் சென்ற வாரமே அறிந்தேன். இதோ, இந்த முடிப்பைப் பைக்குள் போடுகிறேன். ஹாஸ்டலுக்குச் சென்று இரகசியமாகப் பாருங்கள்!

சீனு : என்ன கனமா யிருக்கிறதே, நகையா?

மதுரம் : நகையோ, நாணயமோ... அங்கே சென்று பாருங்கள்; அடக்கமா யிருங்கள்!

சீனு : மதுரம், என்னவோ செய்கிறதே; யாரோ எனது நம்பிக்கையைச் சம்மட்டியால் உடைப்பதுபோ லிருக்கிறதே! கண்ணே, நான் எங்காவது போய்ப் பிழைத்துக் கொள்வேன். உனக்கொரு கெட்ட பெயர் வந்தால் நான் பொறுக்க மாட்டேன். என்னை மறந்துவிடு!

மதுரம் : இப்படிச் சொல்லவா உங்களை நம்பினேன்? இதைவிடக் கடலில் இதோ விழுந்து விடு

கிறேன். எனது ஆவி அங்கிருந்து தங்களை ஊழூழி கூவிக்கொண் டிருக்கட்டும்.

சீனு: வேண்டா, கண்ணே, மன்னி! உன் னில் என்னை மறக்கிறேன்; நீ என் உலகம்.

மதுரம்: நீங்களே என் உயிர்.

பிறகு பேச்சில்லை. ஓர் இன்பச் சொக்கில் இரு வரும் உலகை மறந்தனர்; காலத்தை உதாசீனம் செய்தனர்.

"அடுத்த ஞாயிறு, இதே இடம்"...என்று மதுரம் விரைவாக நடந்து கல்லூரிக்குச் சென்ருள். சீனு நெடுநேரம் அந்தப்பக்கம் வைத்த கண்ணை எடுக்காமற் பார்த்திருந்து, உருவம் இருளில் மறைந்த பிறகு, 'இந்த அன்பு எப்படி முடிகிறதோ!' என்று ஒரு பெரு மூச்சுடன் ஹாஸ்டலுக்கு வந்தான்.

நல்ல வேளையாக, நண்பர் கோகலே ஹால் கூட் டத்திற்குச் சென்றிருந்தனர். அதே கூட்டத்திற்குச் செல்வதாகச் சொல்லி வந்தே மதுரம் தன்னைப் பார்த்தாள். கூட்டம் வாழ்க! வந்ததும் பசக்கென்று கதவை மூடி, மின் விளக்கேற்றி, அந்த முடிப்பை அவிழ்த்தான் சீனு. பளபள வென்று ஒரு வடம் கடிகாரச் சங்கிலியுடன், ஒரு கடிதம் இருந்தது. ஆவலாகக் கடிதத்தைப் படித்தான்:

"என் உயிரே, தங்கள் நிலையை அறிந்தேன். ஏழையின் உதவி இது. இதைக்கொண்டு பரீட்சையை முடிக்கவும். ஒரு மாதத்தில் விடுமுறை; நமக்கும் விடு தலை! நமது ஆசை நிறைவேறும். சந்தேக மில்லை. யார் தடை செய்தாலும் நடக்காது. தைரியம்! உடல் பொருள் ஆவியெல்லாம் தங்களுக்கே ஒப்படைத்த— மதுரம்..."

"ஆ, இந்த அன்பு! இதற்கு நான் தகுதியுடையவனு" என்று சீனு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். ஆனுல், சங்கிலியைத் தொடும்போது பாம்பைத் தொடுவது போல் அவன் கை நடுங்கியது. மகா மானியான சீனு அதனுல் என்ன வருமோ என்று திகைத்தான். அவன் சிந்தனை ஒரு நீண்ட சங்கிலியாக வளர்ந்தது. ஒரு பெண்ணின் நகையை விற்று நான் பிழைப்பது? நாளை அகப்பட்டுக்கொண்டால்? வழக்கு வந்தால்? 'நான் தரவில்லை. இவனே திருடினுன்' என்று அவள் பாசாங்கு செய்தால்? யார் மனத்தை யார் அறிந்தார்கள்? விற்கப்போகுமிடத்தில் சிக்கிக் கொண்டால்? செடிப் பவுனில் அவள் பெயர் இருக்கிறது. தங்கச் சங்கிலி எனக்கே இரும்புச் சங்கிலி மாட்டினுல்? எனது கிண்டல் நண்பர் கண்டால்? எல்லாரும் கேலி பண்ணுவார்கள்; புகார் மேலே போகும்; அவள் தகப்பனுருக்குத் தெரிந்தால் பெரிய வம்பு. இந்தச் சங்கிலியில் அபாயம் இருக்கிறது. ஆதலால், இதை அடுத்த ஞாயிறு அதே இடத்தில் அவள் கழுத்தில் போட்டு, எப்படியாவது பரீட்சையைக் கடத்திவிட்டு, சினிமாவில் சேர்ந்து விடுகிறேன்.

என்று இந்த முடிவுக்கு வந்ததும், சீனு சங்கிலியைப் பெட்டிக்கடியில் கவனமாகப் பதுக்கினுன்; கடிதத்தைக் கிழித்தெறிந்தான். நண்பரும் வந்தனர். ஹாஸ்டலுக்குச் சென்ருன்.

இரண்டாண்டுகளாகவே சென்னைக் கடற்கரையில், யுவதிகள் சிலரின் நகை காணுமல் போவது வழக்கமா யிருந்தது: 'உலவும்போது விழுந்தது, குளிக்கும் அறையில் வைத்துக் காணுமல் போனது, கூட்டத்தில் தவறியது, தூக்கத்தில் நழுவியது'

என ஏதேதோ சொல்லி, அவர்களும் நிகழ்ச்சியின் உண்மையை மழுப்பிச் சும்மா இருந்தனர். ஆனால், இந்த நிகழ்ச்சி தடபுடலாகிவிட்டது. சர்க்கிள் - இன்ஸ்பெக்டரது பெண்ணின் சங்கிலியன்றோ? கல்லூரித் தலைவி முடிந்த மட்டும் பார்த்தாள்; ஊகித்தாள். மதுரத்தின் ஒழுக்கத்தில் யாருக்கும் சந்தேகம் கிடையாது. முடிவில் போலீசுக்குப் புகார் செய்யவேண்டி வந்தது. போலீஸ் சப் - இன்ஸ் பெக்டர் வந்தார்; வாக்குமூலம் வாங்கினர்: "காலை குளிக்கப் போகும் போதுதான் சங்கிலியைக் காண வில்லை; இரவில் போயிருக்க வேண்டும்" என்ருள். 'இரவல்' என்பதற்குப் பதில் 'இரவில்' என்ருள்; பரவாயில்லை. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இந்தத் திருட்டை ஒரு வாரத்தில் கண்டுபிடிக்கக் கெடுபிடி யான உத்தரவு போட்டார்.

ஒற்றர், கண்ணில் திரி போட்டுக் கொண்டு மெரீனவிலிருந்து கல்லூரி வரையில் உலா நடத் தினர். கெட்டிக்கார ஒற்றனெருவன் கல்லூரிக் கெதிரே பழி கிடந்தான்; அங்கே சுண்டல் பட்டாணி விற்கும் பெண்களுடன் அவன் வேடிக்கையாய்ப் பேசினன். அதனல், ஒரு செய்தி வெளிவந்தது. "அதோ, அந்தப் பச்சைச் சேலைக்காரி அந்தாலே போய்த் திரிந்து இருட்டியதும் வருகிருள்" என்று சுண்டல் கிழவி சொன்னுள். பச்சைச் சேலைக்காரியே மதுரம்! அந்தத் திசையில் ஒற்றன் கண் சென்றது. ஆம், ஐந்தரை மணிக்கு மாணவனெருவன் அதே இடத்திற்கு வந்தான்; சிறிது நேரமிருந்து மணலில் ஏதோ புதைத்து மேலே கல் வைத்துச் சென்ருன். ஆறரை மணிக்கு அதே இடத்தில் பச்சைச் சேலைக்

காரி வந்தாள். மணலைத் தோண்டி எதையோ எடுத்துக் கொண்டு விரைவாகக் கல்லூரிக்கு வந்துவிட்டாள். சீனு-மதுரம் காதற் கடிதங்களுக்குக் கடல் மணல் தபால் பெட்டியாக உதவியது; இவ்வளவு போதாதா? அவனுக்கும் இவளுக்கும் நேசம்; பிறகு, சங்கிலி மர்மம் ஊகிக்கத் தக்கதே!

ஒரு வாரம் கனவுபோலச் சென்றது. அதே இடம்; அதே நேரம். சீனு வந்து 'உஸ் அப்பாடா' என்று விழுந்தான். மஞ்சள் வெய்யில் அவனைப் பரீகசிப்பதுபோ லிருந்தது. அவன் மனத்தில் பெரிய சுமை இருந்தது; அதை யாரிடமோ தள்ளி விடுதலை பெறவே அன்று வந்தான்; பையில் கையை விட்டு மெல்லச் சங்கிலியை எடுத்தான். அதன் பளபளப்பை மாலை வெய்யிலில் காட்டி யனுபவித்து, மீண்டும் பைக்குள் போட்டுக்கொண்டு மேற்கே பார்த்தான்.

"குட் ஈவினிங் சார், தாங்கள் தாமே சீனிவாசன்? தங்களை வெகு நாளாகப் பார்க்க வேண்டு மென்று... இன்றே சமயம் கிடைத்தது" என்றுர் ஆசாமி வந்தான். உடை நடை பேச்சு எல்லாம் தளுக்காக அளந்து வைத்ததுபோல் இருந்தன. பரீட்சை சமயமாதலால், கேள்வித் தாட்களைப்பற்றிச் சிறிது பேச்சிழுத்துப் பிறகு வாலிபருக்குரிய அந்தப் பேச்சில் இறங்கினுன்.

—என்னுங்க ப்ரதர், பரீட்சை நம்மை என்ன பாடு படுத்துகிறது!

—பாடுபட்டுப் பரீட்சைத் தேறினுலும், உலகம் நம்மை என்ன பாடு படுத்துகிறது? வேலையில்லாமல் படித்தவர்கள் திண்டாடுகிருர்கள்.

—அது சரி; ஆனால், அந்த வேலை கிடைக்கு முன்பே ஏதாவது, கண்ணியில் மனப்புள் சிக்கி விடுகிறது.

—ஐம்புலன்களுக்கு எங்கும் கண்ணிகளே. வயதின் கொடுமையும் காலக் கொடுமையும் சேர்ந்தால் சொல்ல வேண்டுமா? வெண்டாமரையும் செந்தாமரையும் ஒன்றை யொன்று பார்த்து மோகித்துப் போகின்றன; அலையும் அலையும் மோதுகின்றன.

—உண்மை ப்ரதர்; இந்த மெரீனாவிலேயே, எத்தனையோ அலைமோதலை இந்தக் கண்ணால் பார்த்திருக்கிறேன். வாலிப உணர்ச்சிக்குச் சுயாதிகாரம் ஈந்ததே நவநாகரிகத்தின் பெருமை என்கிறார்கள்.

—வாலிப உணர்ச்சியை அடக்கி யாளுவதே பெருமை என்று நான் சொல்கிறேன்.

—எங்கே அடக்குவது சார்? எல்லாம் வெளிச்சம். 'கரும்பை விரும்பாதே' என்று எறும்பை அடக்க முடியுமா சார்? கொஞ்சம் கடலை கொறியுங்களேன். இந்தாருங்கள், நிரம்ப வாங்கினேன்.

சீனு கைநிரம்ப வாங்கிப் "போதும்" என்றான். "நல்லாச் சாப்பிடுங்க பிரதர்" என்று ஆள் சீனு பையில் கடலை நிரப்புவதுபோல் கைபோட்டுச் சங்கிலியை எடுத்துவிட்டான்! உடனே நாற்புறமும் பார்த்தான். இதற்குள்ளாகவே நான்கு கான்ஸ்டேபில்கள் வந்து, "வா பின்னே!" என்று சீனுவை இழுத்துச் சென்றனர். "ஐயோ, நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே" என்று சீனு முறையிட்டான். "கப்சிப்; எல்லாம் இன்ஸ்பெக்டர் முன்." சீனு இரவெல்லாம் பாதுகாப்பில் இருந்தான்...விதி விதி!

மதுரம் அதே நேரம், அதே இடத்திற்கு வந்தாள். யாருமில்லை. இங்கு மங்கும் கடலை சிந்தியிருந்தது. மனம் துடித்தது. குட்டியைப் பறிகொடுத்த பூனை போல், அங்கு மிங்கும் பார்த்தாள். கடற் காட்சியில் இருள் படர்ந்தது. அவளைப் பயம் பற்றியது. தனது காதல் மாளிகையில் ஆகாசக் குண்டு விழுந்தது போல் அவள் உணர்ந்தாள்; திகைத்தாள். அச்சமயம் யாரோ, "அம்மா, தனியே என்ன செய்யிறீங்க?" என்றார். "யார்?" அதே ஒற்றன். மதுரம் பேசாமல் கல்லூரியைப் பார்க்க ஓடோடிச் சென்றாள்; பசக்கென்று அறைக் கதவை அடைத்துக் கொண்டாள்; படுக்கையில் சாய்ந்தாள்; அவனையே எண்ணி உலகை மறந்தாள். அவள் நெஞ்சு பெரிய கடிகாரம் போல் அடித்துக் கொண்டது.

'டட்டட்!' கதவுச் சத்தம்! "மதுரம், மதுரம், வார்டன் அழைக்கிறார்." கதவு திறந்தது.

—மதுரம் சாப்பிட வேண்டாவா?

—தலை வலிக்கிறது, சாப்பாடு பிடிக்கவில்லை.

—வா, சப்-இன்ஸ்பெக்டர் வாக்குமூலம் வாங்க வந்திருக்கிறார்; திருடன் அகப்பட்டானும்; சங்கிலி அவன் பையிலிருந்ததாம்.

காரியம் தலைக்கு மிஞ்சிப் போனது. இனி எதை ஒளிப்பது? அச்சம் நாணம் மடமை பயிர்ப்பு எல்லாம் தகர்ந்தன. மதுரம், இன்ஸ்பெக்டர் கேள்விகளுக்குச் சுருக்கமாக விடை யளித்தாள். கையெழுத்துப் போடச் சொல்லி அந்தக் காகிதத்தை இன்ஸ்பெக்டர் தந்தார்.

"அன்பு, அன்பிற்குத் தந்த சங்கிலி அது; இனி விவகாரமில்லை" என்று கொட்டை யெழுத்தில் எழுதி

வாசித்து, மதுரம் கையெழுத்திட்டு, "ஐயா, இதை சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடமே தாருங்கள்!" என்ருள்.

எங்கும் இதே பேச்சு! இளம் பெண்கள் இந்த நிகழ்ச்சியையே பெரிதுபண்ணி, "என்ன துணிச்சலடீ இவளுக்கு? ... சாதுவாயிருந்தாளே!...ஹி ஹி ஹி" என்று ஜலதரங்கம் அடிப்பதுபோலச் சிரித்தனர்! சிலர் "கொடுத்து வைத்தவள்" என்று ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தனர்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கோவிந்தன், உடனே மோட்டாரில் வந்து "நீ படித்தது போதும்" என்று தம் மகளை வீட்டுக்கு அழைத்துச் சென்ருர். 'பெண்ணே, என்ன அசட்டுத்தனம்? தலை நீட்ட முடியவில்லையே அவமானம்: உனக்கு ஒரு வரனை வேறே தீர்மானித்திருக்கிறேன். சம்பந்தி என்ன நினைப்பார்? போ, உன் அதிர்ஷ்டம் அவ்வளவுதான்' என்று நொந்து கொண்டார். "அப்பா, பாவும் ஊடும் சேர்வது அசட்டுத்தனமா? பாட்டும் சுருதியும் சேர்வது அசட்டுத்தனமா? உண்மையான உள்ளங்கள் கள்ளமின்றிக் கலப்பது அசட்டுத்தனமா?" என்று மதுரம் தனது கட்சியை ஆணித்தரமாகப் பேசி நிலை நாட்டிஞள்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சீனுவை நேரே அழைத்து வரும்படி சொன்னர்; ஆளைப் பார்த்தார். "சை, இவனிடம் கரவில்லை. முகத்தில் திவ்யதேஜஸ் ஜொலிக்கிறது" என்று அவர் மனச் சாட்சி சொன்னது. "அப்பனே, உனது செய்தி யென்ன? விவரமாகச் சொல்லிவிடு!" என்ருர்.

இதற்குள் மரதும் ஓடி வந்தாள். "நான் தான் விவரமாகச் சொன்னேனே அப்பா" என்ருள்.

சீனு, “ஐயா, என் குற்றம் காதல்; அஃது இருவர் குற்றம். இருவரும் ஒரு நாள் கண்ணுறவு கொண்டோம் ; அது மனவுறவானது. பிறகு நான் வேறு பெண்ணை நினைத்ததில்லை. என் தகப்பனுர் ஒரு பெண்ணை எனக்குத் தீர்மானித்துக் கடிதம் எழுதினர்; நான் மறுத்தேன். அவர் பணம் அனுப்புவதை நிறுத்திவிட்டார். எப்படியாவது கடனை வாங்கிப் படிப்பை முடித்து, சினிமாவில் சேர்ந்து கடனடைத்து விடுவதாகத் தீர்மானித்திருந்தேன். மதுரம், என் பைக்குள் ஒரு முடிப்பைப் போட்டாள் ; ஹாஸ்டலுக்குச் சென்று பார்த்தேன். பிறகு நடந்ததை அவளே சொல்லி யிருப்பாள். பகவான் என் கண்ணைத் திறந்தார்” என்றுர்.

இதற்குள் உள்ளே யிருந்து ஜானகிப் பாட்டி வந்தாள் ; உற்றுப் பார்த்தாள். “அடே, நீ நாராயணன் பிள்ளைதானே” என்று ஒரு குதி குதித்தாள் !

“அப்படியா...வாருங்கள் மாப்பிள்ளை ! எல்லாம் காலப் பிசகு. தங்களை நான் பார்க்க விரும்பினேன் ; உத்தியோகத் தொல்லை; இந்த மாதம் முழுவதும் சுற்றித் திரிந்தேன் ; தங்கள் தகப்பனுர் எனது பாலிய சிநேகிதர் ; அவரையும் பார்த்து நெடுநாளானது. என் தாயாருக்கு அவர்களைத் தெரியும் ; தூர உறவுங் கூட. இந்தச் சம்பவம் இதனுடன் ஒழிந்து போகட்டும். சொல்ல வேண்டிய பேருக்கு நானே சமாதானம் சொல்லுகிறேன் ; இதோ தகப்பனுருக்கும் தந்தி யடிக்கிறேன்” என்றுர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

அந்தக் கடிகாரச் சங்கிலியை சீனு கையில் கொடுத்து, “தங்கள் மனைவிக்குச் சூட்டுங்கள்” என்

ரூர் கோவிந்தன். 'சுபம், சுபம்' என்று எல்லாரும் வாழ்த்தினர்!

அடுத்த வாரமே கலியாணம் நடந்தது! சீனு மாப்பிள்ளைக் கோலத்துடன் **பி.எஸ்ஸி.,** பரீட்சை எழுதினன். மதுரம் இன்டர் பரீட்சை கொடுத்தாள். இருவரும் பரீட்சை தேறினர்; பிறகு வாழ்வுப் பரீட்சைக் கூடத்தில் புகுந்தனர்.

நாமும் அவர்களுக்குச் சுபமங்களம் பாடிக் காதலை வாழ்த்துவோம்!

5. காவேரியின் திருமணம்

நாடெல்லாம் சுற்றித் திரிந்து ஒரு மகாமகத்திற்குப் பிறகு ஐயன்பாளையத்திற்கு வந்தேன். காவேரியில் குளித்துவிட்டு முருகன் கோயிலுள் நுழைந்தபோது, “ஹரி, நில்லும், நில்லும்! எப்போ வந்தீர்?” என்றொரு சத்தம் என்னைத் தொடர்ந்தது.

திரும்பிப் பார்த்தேன். “தாங்கள் யார்? அடையாளம் தெரியவில்லையே?” என்றேன்.

“என்னைத் தெரியவில்லையா? நான்தான் தங்கள் மாணவன் **சிவராமன்.** காட்டுப்புத்தூர் பள்ளிக்கூடத்தில் தங்களிடம் படித்தது நினைப்பில்லையா?” என்றார் அந்த ஆசாமி.

உற்றுப் பார்த்தேன்; “ஆ! என் அருமைச் சிவராமனா? உன் **மித்யா ஜகத்** எப்படியிருக்கிறது?” என்று வினவினேன்.

“ஸ்வாமி, அதோ என் மித்யா ஜகத் காவிரியில் தண்ணீர் மொண்டு செல்லுகிறது. வாருங்கள் வீட்டிற்குப் போகலாம்!” என்றான் சிவராமன்.

முதலில் சுவாமி தரிசனம் செய்தேன். சிவராமன் என் பெயருக்கு ஓர் அர்ச்சனையும் செய்வித்து, தீபாராதனை காட்டுவித்தான். விபூதிப் பிரசாதம் வாங்கிக் கொண்டு, நான் அவன் பின்னே நடந்தேன். போகும்போதே, “உன் ஜனத்தொகை விகிதம் எப்படி?” என்று ஒரு கேள்வி போட்டுவைத்தேன். வாசலில் ‘கிசிபிசி’ என்று இரண்டு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. “என் ஜனத்தொகை

இரண்டு வருஷத்திற்கு ஒன்ருக இந்த இரண்டும். இவன் சங்கரன், இவள் பார்வதி" என்ருன். நான் குழந்தைகளுக்கு என் பையிலிருந்த கற்கண்டுக் கட்டிகளைக் கொடுத்தேன். அவை "மாமா" என்று என்னைத் தழுவிக்கொண்டன. "இந்தக் குழந்தை போல் நம் உள்ளமும் களங்கமற்று உலகுடன் ஒட்டுறவா யிருப்ப தென்ருே?" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தேன்.

சிவராமன் விர்ரென்று ஓடிப் போய், ஒரு பலகையைக் கொண்டு வந்து போட்டுவிட்டுச் சமையலறைக்குச் சென்று, மனைவியிடம் ஏதோ சொன்ஞன். அவள் ஏதோ அவன் காதில் சொன்ஞள். சிவராமன் உடனே கொல்லைப் புறமாகக் கடைக்கு ஓடினன். நான் 'சிவசிவா' என்று கண்ணை மூடி ஜபம் பண்ணிக் கொண்டிருந்தேன். அப்போது, "சங்கரா இந்தா, மாமாவுக்குப் பால் கொண்டு போய்க் கொடு!" என்ருெரு குரல் கேட்டது. "மாமா, இந்தா பாச்சி" என்று சங்கரன் அழகு சொட்டும் அமுத நகையுடன் என்னிடம் ஒரு வெள்ளிக் கூஜாவைத் தந்தான்! சந்தோஷமாக வாங்கி, சங்குவுக்குச் சிறிது தந்து, நான் கொஞ்சம் குடித்து, "மீதியை அம்மாளுக்குக் கொடு" என்று அனுப்பினேன்.

"இங்கே இருக்கு, சங்கு; மாமாவைச் சாப்பிடச் சொல்லு!" என்று பதில் வந்தது.

"மாமாவுக்கு அவ்வளவுதான் வயிறு. சங்கு, இதைத் தங்கைக்குக் கொடு!" என்று தந்தேன்.

சங்கு, "பார்வதி, மாமா தந்தா; பாச்சி குடி!" என்று ஊட்டினன்.

நான் இரண்டு குழந்தைகளையும் மடியில் உட்கார வைத்து, மழலை யமுதம் பருகிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு மூட்டையுடன் சிவராமன் கடையிலிருந்து வந்து, "இதோ வருகிறேன்" என்று உள்ளே சென்றான்.

"காவேரி, இதுதான் அவன் கடையிலே நல்ல பருப்பாம்; இது நெல்லூர் அரிசி. இவை பண்ணைத் தோட்டத்துக் காய் கறிகள். ஒரு பருப்புக் குழம்பு வைத்து, வெண்டைக்காய் கோசும்பரி, பாகற்காய் பிட்லே பண்ணி, அப்பளம் வடாம் பொரித்துவிடு, போதும். நாளைக்குப் போளி வடை நடக்கட்டும்!" என்று சிவராமன் சொல்லும் சத்தம் கேட்டது.

"அப்பனே, அங்கே சிரமப்படுத்தாதே! ஏதாவது எளிதாகச் சமைத்தாலே போதும்" என்றேன்.

"அத்தி பூத்தாற்போல் வந்திருக்கிறார்கள்; நாளைப் பின்னே வருபவர்களா? நன்றாகச் சாப்பிடட்டும். எனக்கென்ன வேலை இதைவிட? ஏதோ என் மனத்திற்குப் பிடித்ததைச் செய்கிறேன்" என்று காவேரியின் வீணைக் குரல் கேட்டது.

"ஆகா! என்ன அற்புதமான ஒற்றுமை, இருவருக்கும்!" என்று மகிழ்ந்து, "சரி, அங்கே எப்படி விருப்பமோ, அப்படி நடக்கட்டும்" என்று சொல்லி நான் ஜப மாலையில் கை வைத்தேன்.

சிவராமன், "உள்ளே வர வேண்டும்" என்று என்னை வரவேற்றுக் கூடத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கே ஒரு சுவரில் அலமாரி இருந்தது; திறந்தான். பெரிய பாண லிங்கமும், சுப்பிரமணிய விக்கிரகமும் இருந்தன.

"இன்று, பெரியவாள் கையாலே சிவாராதனம் நடக்க வேண்டும். இதோ புஷ்பங்கள், காவேரி தீர்த்தம், சந்தனம் எல்லாம். நான் ருத்ரம் சமகம் புருஷஸூக்தம் சொல்லுகிறேன்" என்ருன்.

"ஆகா! இது பாக்கியம்" என்று நான் பூசைக்கு உட்கார்ந்தேன்; புருஷஸூக்தம் சொல்லி அபிஷேகம் நடத்தி, துடைத்து, வஸ்திரம் கட்டி, சந்தனம் வைத்து, சிவநாமங்களைச் சொல்லி, சிரத்தையாக அர்ச்சனை செய்தேன். '**டங்**' என்று பத்து மணி. கமகம வென்று நிவேதனம் செய்து, தூப தீபம் காட்டினேன். காவேரி மங்கள ஹாரத்தி யெடுத்து ஸதாசிவ ப்ரஹ்மேந்திராள் கீர்த்தனம் ஒன்றைக் கணீரென்று பாடினுள்:

அது "சிந்தா நாஸ்தி கில" என்ற புகழ்பெற்ற கீர்த்தனம். "சமம் கருணை இவற்ருல் சம்பூர்ணமான வர்களுக்கும், சாது சங்கம் செய்பவர்களுக்கும், காமஜயம் பெற்றவர்களுக்கும், இந்திரியங்களை அடக்கியவர்களுக்கும், பரமஹம்ஸ குரு பாதங்களை தியானிப்பவர்களுக்கும், பிரம்மானந்த வெறி பிடித்தவர்களுக்கும் எவ்விதமான கவலையுமில்லை" என்பதே அதன் பொருள். அந்த அம்மாள் பாடும்போது எனக்குப் பராசக்தியே உபதேசம் செய்வது போலிருந்தது. குவித்த கையுடன் நான் சக்தியைத் தியானம் செய்துகொண்டிருந்தேன்.

அம்மாள் உள்ளே சென்ருள். பத்து நிமிஷத்திற்கெல்லாம் "சங்கு, எல்லாரையும் மாமாவையும் கூட்டிக்கொண்டு சாப்பிட வா, அப்பா" என்ற கிண்கிணிக் குரல் கேட்டது. "எழுந்திருங்கள், இலை போட்டாயிற்று!" என்று சிவராமன் என்னை அழைத்துச்

சென்றுன். எனக்குப் பெரிய பலகை போட்டு, முன்னே தலைவாழை இலை விரித்திருந்தது. என் இடப் பக்கத்தில் சிவராமனும், இந்தப் பக்கம் இரண்டு குழந்தைகளும் உட்கார்ந்தனர். காவேரி மான்போலத் துள்ளி வந்து, எனக்கொரு நமஸ்காரம் செய்தாள். "தீர்க்க சுமங்கலீ பவ!" என்று ஆசீர்வதித்தேன்; உடனே வெகுவேகமாகப் பரிமாறினுள். நான் சாப்பிடும்போது மௌனம். ஆதலால், என் குறிப்பறிந்து, நன்ருக வேண்டிய தெல்லாம் போட்டாள். எனக்கும் நல்ல பசி. பத்தினி சமையலில் அறுசுவைக்குமேல் அன்புச்சுவை அதிகம். என் அளவிற்கு நான் சாப்பிட்டேன். "குழந்தை மாதிரிச் சாப்பிடுகிருரே, நன்ருகச் சாப்பிடச் சொல்லுங்கள்" என்ருள். சிவராமன், "இருந்து நிதானமாகச் சாப்பிடுங்கள்" என்று உபசரித்தான். நான் கைச் சாடை காட்டி, அளவுடன் உண்டு எழுந்தேன்; அவனும் எழுந்தான். குழந்தைகளும், "மாமா, மாமா" என்று என் பின்னே வந்தன. நான் கை யலம்பி, குழந்தைகளுக்கும் கையலம்பிவிட்டு, என்னுடன் நடைக்கு அழைத்து வந்தேன்.

சிவராமன் சாப்பிட்டதும் சட்டைகளை மாட்டிக் கொண்டு, "இதோ என் பீரோச் சாவி; புஸ்தகங்களைப் பார்த்துக் கொண்டிருங்கள். நான் பள்ளிப் பிள்ளைகளுக்காக இந்த நாடகம் எழுதி யிருக்கிறேன். அதைத் திருத்திக் குறித்த இடங்களில் பாட்டும் போட்டுக் கொடுங்கள்" என்று வேலை தந்துவிட்டுப் பள்ளிக்கூடம் சென்ருன். சிவராமனுக்கு அந்த ஊர் போர்டு பள்ளிக்கூடத் தலைவர் வேலை என்பதை யறிந்தேன்.

நான், சிவராமன் பீரோவை மெல்லச் சோதிக்கத் தொடங்கினேன். உள்ளே காவேரி சாப்பிட்டானதும், சமையலறையை மெழுகிப் பற்றுத்தேய்த்து, **பெரிய புராணம்** (வசனம்) வைத்துப் படித்துக் குழந்தைகளுக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்தாள்; மணி நான்கானதும், மீண்டும் வீட்டு வேலைக்காக நீர் சுமந்துவரச் சென்றாள்.

சிவராமன் பீரோவில் அரிய தமிழ்-ஆரிய-ஆங்கில நூல்கள் இருந்தன. இப்படியும் அப்படியுமாகப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தேன். கம்ப ராமாயணத்தைத் திறந்தேன்; தொப்பென்று ஒரு பழைய காகித உறை விழுந்தது. மெல்லப் பிரித்துப் பார்த்தேன்; குட்டு வெளியாய்விட்டது. அதனுள் சிவராமனும் காவேரியும் முதலில் எழுதிக் கொண்ட கடிதங்கள்! நான் கடிதங்களை ஊன்றிப் படித்துக் கொண்டிருந்த போதே சிவராமன் வந்துவிட்டான்.

"சிவராமா, மன்னிக்க வேண்டும். இந்தக் கடிதம் கம்பனிலிருந்து விழுந்தது. பிரித்துப் பார்த்து விட்டேன்" என்றேன். "ஆகா, தங்களுக்கு நானே காட்ட நினைத்தேன். அதை எடுத்துக் கொண்டு வாருங்கள், வெளியே சென்று வருவோம்" என்றான். இருவரும் காவேரிக் கரை வழியே சென்று ஓர் அழகான இடத்தில் அமர்ந்தோம்.

நான்: சிவராமா, நீ கலாசாலையில் படித்தபோது, கல்யாணமே வேண்டாம் என்று அடிக்கடி சதாசிவ சமாதிக்குச் சென்று தியானிப்பதும், விவேக சூடாமணி படிப்பதுமா யிருந்தாயே! தேச சேவைக்காகவே மகாத்மா போல் பிரமசரிய விரதம் பூண்டதும் எனக்குத் தெரியுமே. நீ எப்படி மாயா சக்கரத்தில்

சிக்கிக் கொண்டாய்? உன் பத்தினி மகா உத்தமி......

சிவராமன்: என்னை வசீகரித்தது, அவளுடைய உத்தம குணந்தான்! வீணையும் தந்தியும்போல் நாங்கள் இருவரும் ஒன்று; எங்கள் வாழ்வுக் கீதத்தில் அபஸ்வரமே கிடையாது.

நான்: சம்ஸாரம் ஸாகரம், துக்கம் என்பதை நீ பொய்யாக்கி விட்டாய். 'அறவழி இல்லறம் நடத்தினல், பிறவழி போக வேண்டிய தில்லை' என்ற வள்ளுவர் வாக்கை மெய்ப்பித்தாய். உனக்கேற்ற வாசுகியே காவேரி. அவள் தகப்பனர் இந்த ஊரா? எப்படி உனக்கு இந்த மாணிக்கம் அமைந்தது? யார் பெண் பேசினர்கள்?

சிவராமன்: எங்கள் கண்களே பேசி, மனமே அமைத்தது. இருவரும் எங்கெங்கிருந்தோ வந்து இதோ இந்தக் காவேரிக் கரையில் சந்தித்தோம்.

நான்: சொல், விவரமாய் உன் காதற் கதையை!

சிவராமன் அந்த இரண்டு கடிதங்களையும் அடிக்கடி பார்த்துக்கொண்டே, தன் மன வுலகிலிருந்து அபூர்வமான வாழ்க்கைச் சித்திரங்களை அவிழ்த்துக் கொட்டினன்:

"ஐயன்பாளையம் நவராத்திரி உற்சவம் அமோகமாக நடப்பது உங்களுக்குத் தெரியும். இந்த ஊர் மிட்டாதார் சிறந்த தருமவான். அவர் சங்கராச்சாரியாரான நரசிம்ஹ பாரதிகளின் பரம பக்தர். அவர் ஆணைப்படியே முருகன் கோயில் அழகாகக் கட்டி, அதில் சங்கராச்சாரியாரின் சலவைக் கல் சிலையைப் பிரதிஷ்டை செய்திருக்கிருர். கோயிலுக்கருகே ஒரு அன்ன சத்திரமும் வேத பாடசாலையும் உள்ளன. நவ

ராத்திரி ஒன்பது நாளும் இங்கே ஸமாராதனை நடக்கும். கடைசிநாள் சுமங்கலிகளுக்குப் புடவை ரவிக்கை தருவதுண்டு. அதற்காகப் பல ஊர்களிலிருந்து ஏழைப் பெண்மணிகள் இங்கே கூடுவர்.

ஐந் தாண்டுகளுக்கு முன்பு, நான் காட்டுப்புத்தூரிலிருந்து நவராத்திரி உற்சவத்திற்கு வந்தேன். அதுவரையில் நான் தடிப் பிரமசாரிதான். பெண்களைக் கண்டால் தலைகுனிந்து ஓட்டம் பிடித்தேன். விஜய தசமியன்று இங்கே ஸரஸ்வதி பூசை சிறப்பாக நடக்கும். ஓமம் வளர்ப்பார்கள். இரவில் பெண்கள் சுவாமி மேலும், அம்மன் மேலும் பாடுவார்கள். அன்று சில பெண் குரல்கள் பாடின. பிறகு யாழும் குழலும் போல் ஒரு குரல், கவி குஞ்சரி பதங்களும், முத்துத் தாண்டவர் கீர்த்தனைகளும் பாடக் கேட்டேன். கேட்டவர் பிரமித்துப் போனார்கள். நானே சொக்கிப்போனேன். இந்தக் குரல் எந்த அழகினின்று இப்படி மதுரமாக ஓடி வருகிறது என்பதைப் பார்க்க முயன்றேன். அச்சமயம் என்னையே அந்த முகம் பார்த்ததைக் கண்டேன். முகம் அறிமுகம் ஆயிற்று.

மறு நாட் காலை நான் காவேரியில் குளித்துக் கொண்டிருந்தேன். சிறிது தூரத்தில் அப்பெண்மணியும் குளித்தாள். அருகே அவள் தாயார் குளித்தாள். பெண் பரம ஏழை. சுங்கடிப் புடவைதான் அணிந்திருந்தாள். தாயார் முகத்தில் கவலை தாண்டவமாடியது. ஆனல், அப்பெண் வசந்த ரோஜா போல் வனப்புடன் பொலிந்தாள். நிதான உயரம், மான் போல் மெல்லிய உடல், களையான முகம், சுறுசுறுப்பான களங்கமற்ற பார்வை! நானும் குளித்துப் பூசி, அருகிலிருந்த அரச மரத்தின் கீழ் அமர்ந்து ஜபம்

செய்வதுபோல் அவளையே ஒன்றரைக் கண்ணால் பார்த்து, "ஆகா, என்ன அழகு!......" என்று மயங்கி யிருந்தேன். அடிக்கடி அவளும் கடைக் கண்ணை என்பால் திருப்பி, ஒரு மின்வெட்டால் என் உள்ளத்தைப் பறித்துக் கொண்டிருந்தாள். குளித்த தும் தாயும் மகளும் புறப்பட்டனர். பெண் சிறிது பின்னால் நகர்ந்து, சற்று என்னைப் பார்த்துப் பிற கொருதரம் திரும்பிப் பார்த்துச் சென்றாள்.

அன்று சாயங்காலம் காவேரிக்கரை தனியாயிருந் தது. நான் மறுபடி நீராடிக் கொண்டிருந்தேன். சிலம்போசை 'நான் வருகிறேன்' என்றது. கண்கள் 'உனக்காகவே வருகிறேன்' என்று கயல் புரண்டன. மாலைச் செவ்வனப் பெல்லாம் அவள் முகத்தில் விளங் கின. அவளை "நீ யாரம்மா?" என்று கேட்க வாயெடுத்தேன். நாணம் தொண்டையைப்பிடித்தது. ஆனால், முன்பே விபூதிப் பொட்டணத்தில் இந்தக் கவியை எழுதி வைத்திருந்தேன்:

காலைத் திருவோ, கவித்திருவோ, முல்லைவளர்
மாலைத் திருவோ மயக்குருவோ—சோலைவளம்
கண்டுருகு நெஞ்சைக் கரைகாணாக் காதலால்
உண்டுவரும் வண்டார் உரை!

அவள் முகம் கை கழுவிக் கொண்டிருக்கையில், விபூதி பூசிக்கொண்டு அக்கடிதத்தை மெல்ல அவள் பக்க மாய்க் காற்றுவாக்கில் கைநடுங்கிக் கொண்டே போட் டேன். அவள் அதைப் புன்னகையுடன் எடுத்து இடுப்பில் செருகிக்கொண்டு, என்னைக் கடைக் கண் ணால் அழைத்துச் சென்றாள். நான் காந்தத்தின் பின் சென்றேன். சுவாமி சந்நிதி வந்ததும் சிறிது நின் றேன். "பகவானே! இவள் யார்? நானார்? என்

விரதமென்ன? இவள் நிலை யென்ன? இவளைக் கண்டதும் எனக்கேன் மயக்கம்? இதுநல்லதா, கெட்டதா? கெட்டதானால் கிள்ளியெறி!" என்று வணங்கினேன். கணகண வென்று மணியடித்தது. அச்சமயம் "முருகா, நான் பரம ஏழை, அநாதை; என் பெண்ணுக்கு ஒரு வரனைக் கொடு" என்றொரு குரல் வணங்கியது. பார்த்தேன். அப்படிப் பிரார்த்தித்தது அவள் தாயாரே......அவள் கண்ணில் கண்ணீரைக் கண்டேன். அவள் தன் தாயாருக் கருகே நின்றாள். எனக்கு எல்லாம் விளங்கி விட்டது. சத்திரத்தில் இரவு பந்திபந்தியாக இலைபோட்டுச் சாப்பாடு நடந்தது. என் எதிரே தாயும் மகளும் உட்கார்ந்தனர். அவள் தலைகுனிந்தே அடிக்கடி கடைக் கண்ணால் பார்த்தாள். தாயார் குறிப்பாக என்னையே பார்த்தாள்; எழுந்திருக்கும்போது, "உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும்" என்றாள். "ஆகா!" என்று பின்சென்றேன். கையலம்பியதும், எல்லாரும் ஒரு திண்ணையில் அமர்ந்தோம். பேச்சுத் தொடங்கியது.

தாய் : தங்களுக்கு எந்த ஊரோ?

நான் : அம்மா! நான் பிறந்தது திருச்சி. காட்டுப்புத்தூர் ஜமீன் கலாசாலையில் படித்து, திருச்சியில் மேற்படிப்புப் படித்து உபாத்தியாயர் வேலைக்குப் பரீட்சை கொடுத்திருக்கிறேன்; தேறுவேன்.

தாய் : கல்யாணமானதோ?

நான் : நேற்று வரையில் அந்த உத்தேசம் இல்லை; இனி பகவான் செயல் எப்படியோ?

தாய் : நானையே உபாத்தியாயர் வேலையானால் சமைத்துப்போட ஒரு பெண் வேண்டாமோ? நன்றாகக் கலியாணம் பண்ணிக் கொள்ளும். இளம் வயசு

......ஸ்வர்ண விக்ரகம்போல் இருக்கிறீர்! நீ நான் என்று உமக்குப் பெண்ணைத் தருவார்கள்.

நான் : பகவான் இச்சை எப்படியோ, பிராரப்தம் எப்படியோ, அப்படி நடக்கட்டும். உடனிருப்பது உங்கள் பெண்ணு? கலியாணமானதா? பெயரென்ன?

தாய் : காவேரி......என் ஒரே பெண். ஒருவன் கையில் இவளைப் பிடித்துக் கொடுத்துவிட்டால், என் பந்தம் தீர்ந்தது; காசி ராமேச்வரம் போய் ஜன்மத்தைக் கடைத்தேற்றிச் செல்வேன்.

நான் : கவலை வேண்டா; அம்மா, உங்கள் கதையைத் தெளிவாகச் சொல்லுங்கள்; என்னைச் சொந்தப் பிள்ளைபோல நினையுங்கள். என்னுல் ஆனதைச் செய்கிறேன்.

தாய் : நாங்கள் இருப்பது மயில்ரங்கம். இவள் தகப்பனருக்கு இந்தக் கோயில் சுவாமி பெயர்தான். (தண்டாயுதபாணி ஐயர்). அவர் டாக்டர் வேலைக்குப் படித்தார். திருச்சியிலேதான் — மலைக்கோட்டைத் தெருவில்—நாங்கள் குடியிருந்தோம். அவருக்கு சர்க்கார் ஆஸ்பத்திரியில் வேலை. மாதம் ரூ. 150 சம்பளம். அவர், வந்த பணத்தையெல்லாம் பரோபகாரத்திற்கு என்று அள்ளிவிட்டார்; காந்தி, கதர் என்று செலவு செய்தார். இந்தப் பெண்ணுக்கு ஒரு வரன் பார்க்கவேண்டுமென்று படித்துப் படித்துச் சொன்னேன்; "அவசரம் என்ன? நன்ருகப் படிக்கட்டுமே" என்ருர். பெண், தமிழ், சம்ஸ்கிருதம், இங்கிலீஷ்—மூன்றும் படித்திருக்கிருள்; நன்ருகப் பாடுவாள். காரியத்தில் வண்டு; தங்கமான குணம். அவள் இருக்குமிடம் திருமகள் வாசமாகும். அவர்...

பிளேக் நோயாளிகளைக் கவனிக்கும்போது, நோயுண்டு எங்களை இப்படி அநாதையாக விட்டுப் போனார். எனக்கு வேறு நாதி கிடையாது. நகை நட்டுகளை விற்று இரண்டு வருஷம் எப்படியோ மானமாகக் காலம் தள்ளினேன். பகவானிடத்தில் குறையைச் சொல்லுவோம் என்றுதான் இங்கே வந்தேன்.

நான்: டாக்டர் தண்டாயுதமா? எனக்கு நன்ருகத் தெரியுமே. அவர் மனைவி கமலாம்பாள், மகள் காவேரி இருவரையும் சுதேசிக் காட்சிச் சாலையில் பார்த்திருக்கிறேனே.

தாய்: அந்தக் கமலாம்பாள் நானே; அப்போது அப்படியிருந்தேன்; இப்போது விதி இப்படிக் காலச் சக்கரத்தைத் திருப்பி விட்டது.

நான்: டாக்டர் தண்டாயுதம் பொதுஜன ஊழியர்; சிறந்த தேச பக்தர்; சர்க்கார் உத்தியோகஸ்தராலுைம் கதரே கட்டினர்; காந்தியிடம் அன்பு கொண்டிருந்தார்; ஹரிஜனர்களுக்கு வேண்டிய உதவி யளித்தார். அவர் ஒரு பைசா சேர்த்து வைக்கவில்லை; எல்லாம் தருமத்திற்குத் தந்தார். அவர் மனைவிமக்கள் கஷ்டப்பட நம்மவர் பார்த்திருக்கலாமோ?

தாய்: இந்தப் பெண்ணை எப்படியாவது ஒப்புக்கொள்ளுங்கள்!

நான்: அம்மா, கொஞ்சம் சிந்தித்து நாளைக்குச் சொல்லுகிறேன்.

இச்சமயம் காவேரி உள்ளே யிருந்து விரைவாக வந்தாள்; நமஸ்கரித்தாள்; என் முன் ஒரு குங்குமப் பொட்டணம் வைத்தாள். நான் எடுத்துக்கொண்டு, "வருகிறேனம்மா" என்று சென்றேன்.

கோயில் சந்நிதி சென்றேன். பொட்டணத்தைப் பிரிக்கும்போதே கௌளி சொன்னது. குங்குமத்தை மார்பிலும் நெற்றியிலும் இட்டுக்கொண்டேன்; மடித்த காகிதத்தைக் குறிப்பாகப் பார்த்தேன். ஆ! ஓர் அரிய வெண்பா, என் வெண்பாவுக்குப் பதில், எழுதி யிருந்தது.

கண்டகண் வேறெதையும் காணது; காதலை
உண்டமனம் வேறெதையும் உள்ளாது—பண்டைவினை
ஆவியை ஒன்ருக்கி, அன்புடனே கூட்டியபின்
காவிரிக் குண்டோ கதி?

நான் கொஞ்சம் கவிப் பித்தன்; ஆகையால் அவள் கவிதைத் திறனைக் கண்டு மயங்கினேன். அன்றிரவெல்லாம் கனவுதான்! அவள் என்னுடன் வாழ்வதுபோலும், இன்னும் எத்தனையோ அசட்டுக் கனவுகளும், விநோதக் கனவுகளுமாக இரவைக் கழித்தேன்!

இனித் தடை யென்ன? என் காதலை ஏற்றுக் காதலையும் எழுதிக் கொடுத்துவிட்டாள். ஆனல், எனக்குக் குடும்ப வாழ்வென்ருல் என்ன துன்பமோ என்று பயம். நான் வேதாந்தப் பித்தன். நமது நாட்டில் பெரிய நிலையிலிருந்த பெண்கள், கணவன் தவறிய பிறகு, படும் துயரம் என்முன் நின்று வேதனை செய்தது. இந்தப் பெண்ணைக் கட்டிக் கொண்டு, அந்த அம்மாளையும் காத்துவந்தால் புண்ணிய மாகும் என்று ஒரு சிந்தனை. ஆனலும் திடீரென்று சம்ஸாரத்தில் குதிப்பதை நான் விரும்ப வில்லை. உபாத்தியாயர் வேலைக்குப் பரீட்சை கொடுத்திருக்கிறேன். தேறியதும் ஒரு வேலையில்

ஊன்றிக்கொண்டு, பிறகு யோசிக்கலாம் என்று தோன்றியது. அங்கிருந்து காலை நான்குமணிக்கே குணசேகரத்திற்குக் கிளம்பிவிட்டேன்; பிறகு திருச்சிராப்பள்ளி வந்து, பரீட்சை முடிவையறிந்து பட்டம் பெற்று, வேலைக்கு வேட்டை யாடினேன்.

முசிரியில் வேலை கிடைத்தது. சம்பளம் நாற்பது தான். என் மனம் இப்போது ஒரு துணைவியை நாடிய துண்டு; அவளைத்தான்! ஆனால் அவள் எங்கே? ஜன சமுத்திரத்தில் அந்த இரண்டு ஆன்மாக்கள் எங்கு மறைந்தார்களோ?

ஒரு நாள் என்னுள் ஏதோ ஒரு கிளர்ச்சி யுண்டானது. ஒரு கடிதம் வந்தது. ஆவலாகப் பார்த்தேன். இதோ இந்தக் கடிதமே அது, படிக்கிறேன்:

"தங்களையே சரணமடைந்த ஓர் ஆன்மா இங்கே காத்திருக்கிறது. தங்கள் இருப்பிடம் இன்றே தெரிந்தது. உடனே இக்கடிதம் எழுதினேன். என்னைத் தாங்கள் அங்கீகரிக்க வேண்டும். தாங்கள் திடீரென்று இவ்வூரை விட்ட பிறகு, நான் பெருந்துயரடைந்தேன். எங்கள் நிலைமையை இந்த வீட்டுக்காரர் ஜமீன்தாரிடம் சொன்னாராம். அவருக்கு என் தகப்பனாரைத் தெரியும். அவர் ஒரு பெண் பள்ளிக்கூடம் வைத்திருக்கிறார். அதில் நான் போதிக்கிறேன். மாதச் சம்பளம் பதினைந்து; தாயாருக்கும் எனக்கும் தாராளம். கவலை ஒன்றே. தங்களை அடையவேண்டுமென்பதே. இங்கே ஒரு போர்டு பள்ளிக்கூடம் உள்ளது. அதற்கு ஒரு தலைமையாசிரியர் தேவை. தாங்கள் உடனே மனுப் போட்டால் கிடைக்கும். இங்கே வந்ததும், நாம் தண்டாயுதபாணி சந்நிதியில் விவாகம்

செய்துகொண்டு வாழலாம். கிருபை செய்ய வேண்டும். நான் தங்களுக்கு உண்மையான துணைவி.

அடியாள்,
காவேரி.''

இக்கடிதம் என்மனத்தை இளக்கியது. காவேரி என்னை முற்றிலும் கவர்ந்தாள். அக்கணமே மனுவும், கடிதமும் எழுதினேன். இதுவே அக்கடிதம் :

"அன்புடலைத் தேடி அன்புயிர் இதோ வருகிறது. உன் பரிசுத்தமான மனமும் அன்பும் வாழ்வும் எனக்குத் தெரியும். நான் இனி உன்னவன்; நீ என்னவள். முருகன் முன்னே இருவரும் ஒன்ருகிக் குல தர்மம் நடத்துவோம். அடுத்த ஞாயிறு புறப்பட்டு அங்கே திங்கட்கிழமை சாய்ங்காலம் வருவேன். எதிர்பார்க்கவும்!

அன்பு நிறைந்த
சிவராமன்''

திங்கட்கிழமை ஐயம்பாளையம் சென்றேன். கமலாம்பாளும், காவேரியும் மற்ருெரு கனவானும் என்னைப் புன்னகையுடன் வரவேற்றனர். வீட்டிற்குள் சென்றேன். தோரணம் கட்டி அலங்கரித்திருந்தது; மணை போட்டிருந்தது. அந்தக் கனவான், "இன்று நல்ல முகூர்த்தம், மாப்பிள்ளை வர வேண்டும். நான் யாரோ என்று நினைக்காதீர்கள். நான் தண்டாயுதபாணி ஐயரின் பள்ளித்தோழன்; இந்த ஜமீன்தாரின் மந்திரி. டாக்டர் தண்டாயுதம், இவருக்கு ஒரு தரம் சிகிச்சை செய்து அபாயமான நோயைத் தீர்த்தார். அந்த நன்றியை அவர் மறக்கவில்லை. எனக்குத் தண்டாயுதத்திடம் உயிர் : அவர் மனைவியும் மகளும்

இப்படியானதைக் கண்டு கண்ணீர் விட்டேன்; இந்தப் பெண்ணுக்கு நல்ல நல்ல வரன்களைத் தேடினேன்; தங்களிடமே அவள் அன்பு கொண்டு விட்டாள். ஆதலால்,......" என்னுமுன். வாசலில் ஜமீன்தாரே வந்திறங்கினுர்! அவர், "நடக்கட்டுமே காரியம், மாப்பிள்ளை வரட்டும். இனி நம் ஊரிலேதான் இருக்க வேண்டும். மங்கள ஸ்நானம் செய்து வாரும்" என்றுர். நான் உடனே தைலமாடிப் புத்தாடை அணிந்து வந்தேன். காவேரியும் அவ்வாறே தயாராக வந்தாள். மணையில் அமர்ந்தோம்; ஒருவரை யொருவர் பார்த்துப் புன்னகைபுரிந்தோம். ஓமத்தீ வளர்ந்தது. கெட்டி மேளம் கொட்டியது. "ஸுலக்னே சாவதான" என்றுர்கள். நானும் சாவதானமாகத்தான் நல்ல மனைவியை அடைந்தேன். தண்டாயுதபாணிக்கு அபிஷேகம் செய்து, தீப தரிசனம் கண்டோம். என் பிரமசரியத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, இல்லறம் புகுந்தேன். மறு வாரமே எனக்கு ஐயம்பாளையத்தில் பள்ளித்தலைமை கிடைத்தது. காவேரி, "இனி வேலை வேண்டா" என்று விட்டுவிட்டாள். ஆனுல், நான் அவளைக் கொண்டு ஊரில் உள்ள முதிய பெண்களுக்கெல்லாம் எழுத்தறிவு புகட்டினேன். எல்லாம் எங்கள் வீட்டுக் கூடத்தில். எப்படி என் கதை?"

இப்படிச் சொல்லி முடித்த சிவராமனைப் பார்த்து நான், "வள்ளுவருக்கு வாசுகி வாய்த்தது போல் உனக்கு வாய்த்தாள் காவேரி. நீ பாக்கியசாலி. இப்படி எல்லாக் குடும்பங்களும் ஒத்திருந்தால், உலகம் பேரின்ப மயமாகும்!" என்றேன்.

பூரணச் சந்திரன் எழுந்து காவேரி வெள்ளத்தை வெள்ளி மயமாக்கினுன்; இனிய தென்றல் வீசியது

காவேரியாழ் பொங்கிப் பூரித்தது! "இந்தச் சமயந் தான் அவள் தீப ஹாரத்தி காட்டி பக்தி ரசப் பாட்டு கள் பாடிக் கொண்டிருப்பாள்!" என்றான் சிவ ராமன்.

இருவரும் ஆவலாக எழுந்து அனுஷ்டானங்களை முடித்து வந்தோம். காவேரி, "ஈசனை நம்பி வாழ்ந் தால், எல்லாம் இன்பமே" என்று **காம்போதி** கீர்த் தனம் பாடிக் கொண்டிருந்தாள்.

உண்மை, உண்மை! வள்ளுவர் வீட்டில் கொங் கணர் கற்ற பாடத்தைச் சிவராமன் வீட்டில் கற்றுக் கொண்டு, நான் என்வழியே சென்றேன்.

6. கண்ணுளம் எப்படி?

உலகில் பிறந்த கதைகள் பெரும்பாலும் கண்ணு ளக் கதைகளே. கலியாணம் என்ருல் ஜீவன் இறைவ னுடன் கலந்து அனுபவிக்கும் இன்பம். அது பேரின் பம்; அதைக் காதலர் கூட்டின்பத்திற்கு வைத்தவர் இன்னுரென்று தெரியவில்லை. இந்த வார்த்தை எப்படி யெப்படியோ திரிந்து "கண்ணுளம்" ஆகி விட்டது. என் நண்பர் **இளமுருகனர்** இதைத் தனித் தமிழ் என்கிருர்; கண் + ஆள் + அம் = கண்ணுளம் என்று பதம் பிரிக்கிருர்.

கண்ணுனது ஆளைப் பார்க்கிறது; ஆள் அழகைப் (அம்) பார்க்கிருன்; கண் வழியே காதல் புகுந்து கருத்தைப்பற்றி உயிரை ஒன்ருக்கி முடிச்சுப் போட்டு விடுகிறது—இதுவே அவர் விரிவுரை. "முருகனுரே இந்த விரிவுரையை எங்கே கற்றீர்?" என்று கேட் டேன். "என் **கண்ணுளம்** அப்படித்தான் நடந்தது" என்று தமது கதைச் சுருளை அவிழ்த்து விட்டார்; அந்தச் சுருளையே நண்பர் முன் திருகி விடுகிறேன்:

[எனக்குக் கலியாணம் அனுபவம் இல்லையாத லால், அதில் ஆழ்ந்து பார்த்து அனுபவங்கண்ட முருகனுரே சொல்லட்டும்.]

நான் நச்சினர்க்கினியனர் சங்கத்தில் வித்துவான் தேர்வுக்குப் படிக்கிறேன். கோவைகள், காமத்துப் பால், நைடதம்—இவற்றைப் படிக்கும்போது என் மனத்தை ஒரு சக்தி இழுத்துச்சென்று வைகையாற் றுப் படித்துறையில் உட்கார்த்தி விடும்.

அங்கே நான் அகப்பொருள் இலக்கியங்களுக் கெல்லாம் இலக்கணம் காண்பேன். ஒரு நாள் நான் வைகையில் நீராடி, மேற்கே விடை பெற்றுச் செல் லும் பரிதியைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப் போது என் முகத்தை ஒரு திருமுகம் பார்த்தது; என் விழிகளை ஒரு மின்னல் ஊடுருவியது; என் உள் ளத்தை ஓர் உள்ளம் கவர்ந்தது. "என் உள்ளம் கவர் கள்ளி" இன்னுரென்று எனக்குத் தெரியாது.

நான் அனுட்டானங்களை முடிக்கும்போது அவள் நீர் மொண்டு கரை யேறுவாள்; பிறகு நாலைந்து தரம் கண்ணம்பை என் மனத்தில் பாய்ச்சி ஒரு புன்னகை யுடன் செல்வாள். நாளடைவில் எங்கள் பார்வை பழகிப்போனது. ஆனால், பேச எனக்கு வெட்கம். வைகை வெள்ளத்துடன், என் இதயத்திற் பொங்கும் அன்பு வெள்ளத்தையும் அவள் குடம் குடமாக அள்ளிச் சென்ருள்.

நான் ஓர் இயற்கைப் பித்தன்; என் ஆயுள் முழுதும் கவிக் காதலியுடன் கழிக்கவே மனங் கொண் டவன். மதுரையில் எனக்கு மிகவும் பிடித்தது வைகைக்கரைச் சோலைகளே. ஒழிந்த போதெல்லாம் அங்கே வந்துலாவுவேன்; செங்கதிர் எழுவதும் மறை வதும் பார்த்து மகிழ்வேன். கதிரவன் எழும்போதும் விழும்போதும் எனக்குக் கவிதை தருவான். கதிரொளி யில் மின்னிச் சிலிர்க்கும் ஆற்ருேட்டத்தைப் பார்ப் பதில் எனக்கு இன்பமதிகம். ஆற்ருேட்டத்துடன் காற்ருேட்டமும் என்னைக் கொஞ்சும்.

என் கவிதை இயற்கை யின்பத்தில் சிறகடித்து, வானோங்கி வட்டமிட்டுப் பறக்கும். கவிக் கற்பனை யின் உச்சவடிவமே இவள் என்று எனக்குத் தோன்றி

யது. அருணோதயத்திலும், அந்தி மாலையிலும் நான் கண்ட அழகை அவள் முகத்திற் கண்டேன்; என் இதய மலரில் தேனுண்ணும் வண்டுகள் போல அவள் கருவிழிகளைக் கண்டேன். அவள் காற் சிலம்போசை **கம்பக்கவி போல்** இன்பமளித்தது. அவளுடன் பேச உள்ளம் துடிக்கும், உரை கிளம்பாது. இப்படியே ஒரு மாதம் சென்றது. ஒருவர் உள்ளத்தில் ஒருவர் ஊன்றிக் கொண்டோம்; இடையே நிற்பது...ஒரு **நாணம்.** ஒரு நாள் ஒரு துண்டுக் காகிதத்தில் இந்தக் கவிதை எழுதினேன் :

மின்னலில் பூத்த மிளிர்மா மரையழகே
என்னுளங் கொண்டாடும் இந்திரையே—
உன்னுளம்
சற்றே யறியத் தமிழ்வாய் முகையவிழ்ந்தாற்
பெற்றேன் பெறற்கரிய பேறு.

எனது திருக்குறளில் காமத்துப் பாலில் இதை வைத்தேன்; மறுநாள் ஆற்றிற்கு வந்தேன். அவளும் வந்திருந்தாள். நான் அனுட்டானங்களை விரைவாக முடித்துக்கொண்டு, திருக்குறளை மறந்துவிட்டது போல் படித்துறையிலேயே அவள் கண் படும்படி வைத்துவந்தேன். சங்கத்திற்கு வந்ததும் என் மனம் துடித்தது; அவள் நூலை எடுத்தாளோ, வெண்பாவைப் பார்த்தாளோ, என்ன நினைத்தாளோ, சங்கப் படிப்பிற்காக வந்த நான் எங்கேசிக்கினேன் ? என்றெல்லாம் நினைத்து வெதும்பினேன். ஒரு மணி ஒரு யுகம் போலிருந்தது. மறுநாள் மாலை வழக்கம்போல நான் வைகைக்கு வந்தேன்; அப்பொழுது அவள் அங்கேயிருந்தாள். என்னைக் கண்டதும் நாணப்புன்னகையுடன் குறளை அதே இடத்தில் வைத்துவிட்டுச் சட்

டென்று நீர் மொண்டு சென்ருள். நூலை ஆவலாகப் பிரித்தேன். அதே இடத்தில் இந்தக் கவிதை எழுதி வைத்திருந்தது. படித்தேன்:

செய்ய தமிழ்த்தேன் செழித்த குமுதவாய்
ஐய திறந்த தருந்துகவே—மெய்யான
உள்ளத்தி லென்னுளம் ஒன்றியது! பேரன்பு
வள்ளிக்கு நீரே வரன்!

இதனடியில்—"பேய்ச்சியம்மன் கோயில் ஆல மரம்; காலை 5-மணி" என்றெழுதி யிருந்தது.

பாலுந் தேனும்போல் எங்கள் உள்ளம் கலந்தது. இரவெல்லாம் கனவு விண்ணில் என்மனம் சிறகடித்துப் பறந்தது! மூன்று மணிக்கே எழுந்தேன். அவள் காலையில் எனக்காக வைக்கப்போகும் கடிதத்தை ஊகித்தேன். நானும் ஒருகடிதம் எழுதினேன்: "வள்ளியம்மையே, அன்பு; உன் கவிதையில் என் உள்ளமே காண்கிறது; நான் கவிதா தேவியை உபாசித்தேன்; அவளே உன் வடிவாக வந்து என்னை யாட்கொண்டாள்—என் உயிருடன் நீ கலந்து போனுய்; நீ யின்றி எனக்கு வாழ்க்கை இல்லை; நாம் வள்ளுவர் காட்டிய வழியே நடப்போம்; அந்த வழியில் உனது புன்னகையே என் விளக்கா யிருக்கட்டும்.

உன்னைப் பற்றிக் காலைக் கடிதத்தில் நான் அறிவேன். அதே இடத்தில் கடிதத்தை வைக்கிறேன். நீ நம்பிய நான் **யார்** என்று தெரிவிப்பது என் கடமை. எனது நிலைமை பிடித்திருந்தால் என்னை ஏற்றுக் கொள்!

நான் ஏழை; அநாதை; சிறு வயதிலேயே பெற்ருேரை இழந்தேன்; என் தாய்மாமனிடம் நான் வளர்ந்தேன்: அவருக்கு முதலில் பிள்ளை யில்லாதிருந்

தது; பிறகு ஒரு பெண் குழந்தை பிறந்தது என்று கேள்வி. மாமன் மனைவிக்கு என்னைப் பிடிக்கவில்லை; எனக்குத் தண்டச் சோறு போட அவளுக்கு விருப்ப மில்லை என்பதை அறிந்தேன். நான் உணர்ச்சி மிக்க வன். ஆதலால் சித்திரைத் திருநாளன்று அழகர் கோயிலுக்குப் புறப்பட்டேன். அங்கிருந்து திரும்பி வர மனம் இடந்தர வில்லை; அங்கே துறவி யொருவர் வந்திருந்தார்—சிவானந்தர். அவர் காலில் விழுந்து “என்னை ஏற்றருளி ஞானேபதேசம் செய்யவேண்டும்” என்று அழுதேன். அவர் என்னை அன்புடன் ஏற்றுப் போற்றினுர். அவருடன் நான் காளையார் கோவிலுக்குச் சென்றேன்; அங்கே தமிழ் பயின்றேன். காளையார் கோவில் திருநாள் ஆண்டு தோறும் வெகு சிறப்பாக நடக்கும்; கலைப்புலவர்கள் பலர் அங்கு வருவதுண்டு; அவர்களுடன் நான் அளவளாவிப் பயன் பெற்றேன். எனக்கு இசைக் கலையில் பயிற்சி யிருந்தது; அதை வளர்த்துத் தமிழ்ப் பாமாலையால் இறைவனை வழிபட்டு எனது வாணுளைக் கழிக்க விரும்பினேன்; கல்லிடைக்குறிச்சி வேதாந்த பாகவதரைக் கண்டு என் விருப்பத்தைத் தெரிவித்தேன். அவர் என்னைத் தம்முடன் அழைத்துச் சென்று, இசைக்கலை பயிற்றினுர். அதனேடு உள்ளூர்ப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து ஆங்கிலமும் கற்றேன்; ஸ்கூல் பைனல் தேறியதும், மேலே படிக்கும் யோசனை எனக்கில்லை; எனது வாழ்வைத் தமிழிசையிலேயே செலவிடக் கருதினேன்; தமிழில் உயர்ந்த பயிற்சி பெறவே நச்சினுர்க்கினியார் சங்கத்திற் சேர்ந்து படிக்கிறேன். தமிழே என் தாய், தமிழன்பே தந்தை; தமிழே வாழ்வு. நான் பிறந்தவூர் சோழவந்தான்.

தந்தை சுந்தரம். தாய் யோகாம்பாள்; என் மாமன் பரமசிவம்; என் அத்தை விசாலாட்சி. இதுவே என் கதை. இனி, இறைவனருள் கூட்டினுல் நீயே எனது துணைவி!

உன்னிடமே உயிர் வைத்துள்ள
இளமுருகன்,
(பாலசுப்பிரமணியன்)"

இக்கடிதத்தை உறையிட்டு ஒட்டி இருட்டுடன் காலை 5 மணிக்கே நான் பேய்ச்சியம்மன் கோயிலுக்கு வந்தேன்; அதே சமயம் அவளும் வந்தாள். "வள்ளீ, இதைப் படி!" என்று என் கடிதத்தை அவள் கையில் தந்தேன்; அவள் தன் கடிதத்தைத் தந்து, என் கையைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு ஒரு நாணப் புன்னகையுடன், "சாய்ங்காலம் வீட்டுக்கு வாருங்கள்!" என்று மின்போல் மறைந்தாள். நான் அவள் வீட்டை அடையாளம் தெரிந்துகொண்டேன். எதிர்பாராத இன்பம்! என் உயிர் உடல் மனம் உள்ளம் எல்லாம் வள்ளி மயமானது. அவளே இதயமாகத் துடித்தாள். அவளே என் இரத்தமாகப் பரவினுள். அவளே என் நெஞ்சில் உயிர்த்தாள்.

ஆனுல் அவள் யார்? இதோ நீண்ட கடிதம்; இக்கடிதத்தை எப்போதும் என்னுடன் வைத்துக் கொண்டேயிருக்கிறேன்; எத்தனை தரம் படித்தாலும் சலிக்காது.

"நான் உடல், நீர் உயிர்; நான் கண், நீர் கதிர்; நான் அன்பு, நீர் அறிவு. உமக்காகவே காத்திருந்தேன்; நான் உம்முடன் வாழவே பிறந்தேன். அஃது எந்தை இச்சை; உம்மையே பரபரப்புடன் தேடிக்கொண்டிருந்தேன்; சிவனருள் நம்மைக் கூட்டியது;

நான்யார் இவ்வளவு உரிமைகொண்டாட என்பீரோ? கேளும் :

நான் பிறந்தது முள்ளிப்பாளையம், சோழவந்தானுக் கருகே. எந்தை சிவம்—பெரிய பணக்காரர். என்தாய் விசாலாட்சி. இவர்களுக்கு நெடுநாளாகப் பிள்ளை யில்லாதிருந்தது. முருகனருளால் நான்-வள்ளி-பிறந் தேன். நான் இரண்டு வயதில் தாயை இழந்தேன். தந்தை எனக்கொரு செவிலித்தாயை நியமித்தார். அவள்—சிவகாமி—அன்பு மயம்; அவளே இன்றும் என்னுடன் இருந்து துணைபுரிகிறுள்; அவளை என் தாயாருக்குச் சமானமாக மதித்துவருகிறேன். தகப்பனுர் என்னைப் பிரியமாக வளர்த்தார். அவர் கல்வியிற் சிறந்தவர்; பெரிய தமிழ்ப் புலவர். என்னை அவர் சோழவந்தான் பள்ளிக்கூடத்தில் படிக்கவைத் தார். நான் அங்கே ஐந்தாம் வகுப்புமட்டும் படித் தேன்; பிறகு தமிழ் நன்ருகக் கற்கவே தந்தை என்னை மதுரைக்கு அழைத்துவந்தார். வித்துவான் பரீட்சை யில் தேறிய மீனுட்சியம்மாளிடம் நான் முறையாகத் தமிழ் கற்றுச் சங்கப் பரீட்சைகளில் தேறினேன். மீனுட்சியம்மாள் கணவனை யிழந்தாள் : வேறு ஆதர வில்லை ; தன் மகனுடன் என்னுடனேயே இன்றும் இருக்கிருள்.

மதுரை எங்களுக்குப் பிடித்துப்போனது; முள்ளிப்பாளையத்திலிருந்த நிலத்தைக் குத்தகைக்கு விட்டு, ரொக்கத்தை பாங்கியில் போட்டு, இந்தத் தெருவில் இந்தவீடு வாங்கி இங்கேயே நிலைத்துவிட் டோம். என் தந்தை சென்ற ஆண்டுதான் மார் படைப்பால் இறந்தார். எனக்குத் திருமணம் செய்து பார்க்காமல் அவர் சென்றது ஒரு மனக்குறைதான்.

ஆனால், அவர் என்னிடம் ஒரு புகைப்படம் தந்தார்; அஃது எட்டு வயதுச் சிறுவன் படம். படத்திற்கு கீழே **பாலசுப்பிரமணியன்** என்று எழுதியிருந்தது. முகம் தங்கள் ஜாடைதான்......

படத்தைக் கொடுத்த தந்தைபின் வருமாறு கூறினார். 'வள்ளி, உனக்குத் தக்க மணாளன் இவனே; இவனை நான் தேடினேன்; அகப்படவில்லை. ஆனால் அவன் அறிவாளி; எங்காவது நன்றாயிருப்பான்; அவனுக்குத் தமிழில் விருப்பம் அதிகம். ஒருநாள் மதுரைக்கு வரப்போகிறான்; இப்போது அவனுக்கு 22 வயதிருக்கலாம்; அவனைக் கண்டுபிடித்து நீ மணம் புரிந்துகொள்; என் சொத்து, சுகமெல்லாம் இருவரும் அனுபவித்து மங்கலமாக வாழுங்கள்! வேறு யாருக்கும் நீ சம்மதிக்காதே! உனக்குப் பெரிய துணையாகச் சிவகாமியும் மீனாட்சி யம்மாளும் இருக்கிறார்கள். அவர்களை ஆதரி! சொந்தக்காரன் பங்குக்காரன் என்று யார் வந்தாலும் உறவு கொண்டாடாதே! பாலசுப்பிரமணியன் ஒருவனே உண்மையானவன். அவனைக் கண்மணிபோலக் காத்தேன்; உயர்ந்தநிலைக்குக் கொண்டுவர விரும்பினேன். உன் அன்னை விசாலாட்சி அவனிடம் கடுமையாயிருந்தாள்.

உணர்ச்சி மிக்க பையன் ஓடிப்போனான்; அப்போதே நீ பிறந்தாய். அவன் எங்கோ தமிழ் படிப்பதாகக் கேள்வி; என் உடல் படுத்துப்போனது—இன்றேல் அவனைத் தேடிக் கொண்டுவருவேன்.

நான் உனக்கு ரூ. 50000 சொத்தும் இந்த வீடும் வைத்துவிட்டுச் செல்லுகிறேன். நீங்கள் பிழைப்பிற்கு அடிமைத் தொழில் செய்யவேண்டா. என் அன்பு முழுவதும் தமிழ்த் தாயிடம் வைத்திருக்கி

றேன். இன்று தமிழ்த்தாய் சிறுமை அடைந்திருக்கிருள். அவளை பெருமைப் படுத்தவே இருவரும் வாழுங்கள்; என் செல்வத்தைக் கொண்டு புதிய புதிய தமிழ் நூல்கள் வெளியிடுங்கள்! பழைய நூல்களுக்கு இக்காலத்திற்கு எளிதான தெளிவான உரை எழுதவேண்டும். ஆங்கிலம், வங்கம், இந்தி முதலிய பல மொழிகளில் உள்ள அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கவேண்டும். தமிழுக்கே உரிய புதிய காவியங்களையும் உரைநடை நூல்களையும் காலத்திற்கேற்றபடி வெளியிடவேண்டும். புதிய கவி மலர்கள், சிறு கதைகள், தொடர் கதைகள், நாடகங்கள், காவிய நாடகங்கள், சயன்ஸ் நூல்கள், கணித நூல்கள், உலக வரலாறு, நமது சமுதாய முன்னேற்றத்திற் கேற்ற கட்டுரைகள்—இத்தகைய நூல்களை ஏராளமாக வெளியிடுங்கள்! இந்த வீடு பெரிது; இதில் அச்சுக்கூடம் வைக்கலாம்; மீனாட்சியம்மாளும் துணைசெய்வாள். முருகன் வருவான்! கண்ணே இருவரும் தமிழுக்காகவே வாழுங்கள்!'

நான், 'அப்பா, உன் சொல் அமுதம்; தமிழைப் படிக்கப் படிக்க என் உயிருடன் கலந்துவிட்டது; நீ குறித்த கணவரையே நான் மணந்து தமிழுக்கே இருவரும் வாழுவோம்; உறுதி. உன் பெயராலேயே தமிழ்ப்பணி நடக்கும். நீ தந்த இந்தப்படத்தை நான் வழிபட்டு வருவேன்' என்று வாக்களித்தேன்.

தந்தை சிவநாமத்துடன் இறந்தார். தேவார பஜனையுடன் அவருடலுக்குச் செய்ய வேண்டியதைச் செய்தோம்; அவர் ஆவி என்னுள்ளே துடிக்கிறது. தந்தை இறந்தபின் எனக்குப் பல தொல்லைகள் வந்தன; தாயாதிக்காரர் சொத்தில் பங்குபோட வந்தனர்;

என்னை மணந்துகொள்ள வாலிபர்கள் பலர் வட்ட மிட்டனர்; நான் தந்தை கொடுத்த படத்தையே வழி பட்டு வந்தேன்! என் உள்ளத்தில் வேறு எவர்க்கும் இடம் கொடுக்கவில்லை. சென்றமாதந் தான் மீனுட்சி யம்மாள் நான் வணங்கும் உருவம் போன்ற முகச் சாடையுள்ள ஒருவர் சங்கத்தில் வித்துவானுக்குப் படிக்கிருரென்றும், பிறந்தது சோழவந்தான் என்றும் சொன்னுள். தங்களை ஆற்றுப் படித்துறையில் முரு கன் போலக் கண்டேன்; நான் தேடிய செல்வம் இதோ என்று என் மனம் மகிழ்ந்தது; இன்று சாய்ங் காலம் ஆறு மணிக்குத் தங்களை வீட்டில் ஏதிர் பார்க் கிறேன்—வர வேண்டும்; இனி நான் தங்கள் தரும பத்தினி; என்சொத்து சுகத்தை ஆளும் என் அரசர் தாங்கள்!

தங்களிடம்
உயிர் வைத்த பத்தினி,
வள்ளி.''

இக்கடிதத்தைப் படித்ததும், எனது தமிழார்வம் நிறைவேறியதாகக் கருதினேன். எங்கெங்கோ பிரிந்து திரிந்த நான், முடிவில் சேரவேண்டிய இடத் திற்கே சேர்ந்து எனது வாழ்வுப் பணியை நிறை வேற்ற வேண்டிய வாய்ப்பும் வழியும் அடைந்தேன். இஃது இறைவன் செயலன்றி என் செயலில்லை...... என் ஆசிரியர்கள் இதைக் கேட்டுப் பெருமகிழ் வெய் தினுர்கள்.

அன்று சாயங்காலம் என் நண்பருடன் ஆறு மணிக்குப் பேய்ச்சியம்மன் கோயில் தெருவுக்குப் போனேன்; கிணீரென்று தமிழிசை முழங்கியது. 'வர வேண்டும் மாப்பிள்ளை!' என்று என்னை மீனுட்சியம்

மாள் அழைத்துச் சென்றுள்; வீட்டு வாசலில் தோர ணம் கட்டியிருந்தது; உள்ளே கோலம் போட்டு மணை அமைத்திருந்தது. நான் கூடத்திற்குச் சென் றதும் வள்ளி என்னை வணங்கினுள். எதிரே ஒரு படம் அலங்காரம் செய்திருந்தது; பார்த்தேன்; அஃது என் படமே! இனிக் கதை வளர்ப்பானேன்? வள்ளி யும் நானும் புத்தணி பூண்டு, மணையில் அமர்ந்தோம். தேவார திருவாசகங்கள் முழங்கின. என் தமிழா சிரியர் (மீனுட்சியம்மாள் நண்பர்) மாங்கல்யத்தைத் தந்தார். "நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க" என்று பாடிக்கொண்டே நான் வள்ளிக்குத் திருப் பூட்டினேன். அவள் என்கையில் மோதிரம் போட் டாள்; கழுத்தில் மாலை சூட்டினுள். நண்பர் இனிமை யாக 'வாழ்க அந்தணர்" பாடினர். கண்ணளம் இனிது முடிந்தது. எங்கள் வாழ்வை அன்றுமுதல் தமிழ்ப் பணியில் செலவிட்டுவருகிறோம். சிவன் அச்ச கத்திலிருந்து சிவ மலர்கள் வெளிவருகின்றமை உல கறிந்ததாகையால் வேறு விளக்கம் தேவையில்லை. "எப்படி என் கண்ணளம்?" என்று என் நண்பன் தனது கதையை முடித்தான்.

'எப்படி இந்தக் கண்ணளம்?' என்று நானும் உங்களைக் கேட்கிறேன்; 'இப்படி நமக்கும் வாய்க் காதா?' என்று வாலிபர் பலர் நினைப்பார்களென்பது உறுதி; கண்ணளம் இப்படிப் பொருந்தா விட்டா லும் வள்ளி முருகர் தமிழ்க் காதல் உங்கள் உள்ளத் தில் பொருந்தி யிருக்கட்டும்!

—

அன்பு நிலய நூல்கள்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

இயற்றியவை

புதுக்கவி விட்மன்	1	8
மகாகவி ராஸீன்	1	4
வரகவி தாம்ஸன்	0	8
ஞானி எமர்ஸன்	0	6
மகாகவி தாந்தே	1	8
சாது ஜவானி	0	6
குழந்தை இன்பம்	0	6
அருட்சுடர் வள்ளலார் (ராப்பர்)	1	4
மகரிஷி தாயுமானர்	0	4
நாடகக் கலை (ஆராய்ச்சி)	0	6
அன்பு வழி	0	6
முல்லை மணம் (ஓரங்க இசை நாடகம்)	0	4
எனது பாடல் (Walt Whitman)	0	1½
சதாசிவப் பிரம்மம் (2-ஆம் பதிப்பு)	0	2
சுவாமி இராமதீர்த்தர்	0	2
அண்ணாமலை ரெட்டியார் (2-ம் பதிப்பு)	0	3
முத்துத் தாண்டவர்	0	2
பொது நெறி	0	2
அன்புறுதி	0	4

ANBU NILAYAM

PUBLISHERS & BOOK DEALERS

Ramachandrapuram Po., Trichy Dist. S. INDIA.

ஓம்
சுத்த சக்தி

அன்பு நிலயம்

Printed at The Rajan Electric Press, G. T., Madras.